Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 047 | செவ்வாய்க்கிழமை | மார்கழி 28 ஆம் நாள் 12 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30 செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## இரணைமடு வான்கதவுகள் அனைத்தும் நேற்று திறப்பு

யாழ்ப்பாணம், ஜன.12

கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தின் அனைத்து வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. அதனால் பொது

19

## 68.1 மி.மீ. மழை

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்ப்பாணத்தில் நேற்றுக்காலை 8.30 தொடக்கம் மாலை 5.30 வரையான நேரத்தில் 68.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று வளிமண்டலவியல்

19



## துக்க நாளாக மாறியது இயல்பு மறுப்புப் போர்

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் தூபி இடிக்கப்பட்டமையை அடுத்து நேற்று இயல்பு மறுப்புப் போராட்டம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

பல்கலைக் கழக வாயிலில் உணவொறுப்பில் ஈடுபட்ட மாணவர்களை துணைவேந்தர் சந்தித்து நினைவுத் தூபி அமைக்க இணக்கத்தைத்

19

## வடக்கில் கடும் மழை

### வெள்ளக் காடாகின தாழ்நிலப் பகுதிகள்

யாழ்ப்பாணம், ஜன.12

வடக்கில் நேற்றுமுன்தினம் இரவு முதல் கடும் மழை பெய்து வருவதால் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பல இடங்களில் குடிமனைகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

19



### தூபி இடித்தமைக்கு எதிர்வினை

# இயல்பை இழந்தது வடக்கு – கிழக்கு!

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிக்கப்பட்டமையை அடுத்து வடக்கு- கிழக்கில் நேற்று இயல்பு மறுப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

19

## வடக்கில் எகிறுகிறது கொரோனா தொற்று

### 55 பேருக்கு உறுதி விரிவுரையாளரும் அடக்கம்

யாழ்ப்பாணம், ஜன.12

வடக்கில் நேற்று 55 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை

19

## யாழ். பல்கலை விவகாரம் சுமுகமாகத் தீர்க்கப்படும்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.12

'யாழ். பல்கலைக் கழக நினைவுத்தூபி விவகாரத்தை பயன்படுத்தி குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். அதற்கான வாய்ப்பு வழங்கப்படாது. பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படும். தேவையேற்படின் யாழ். பல்கலைக்கழக

19

## தூபிக்கு அடிக்கல் நடுகையில் மூக்கை நுழைத்த பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜன.12

தூபியை மீள அமைப்பதற்கு அடிக்கல் நடுவதற்காக துணைவேந்தரும் மாணவர்களும் சென்றபோது பொலிஸாரும், சிறப்பு அதிரடிப் படையினரும் அவர்களைத் தடுத்து நிறுத்த முயன்றனர்.

19

## இடிக்கப்பட்ட இடத்தில் புதிய தூபிக்கு அடிக்கல்



யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இடிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை மீண்டும் அமைப்பதற்கு துணைவேந்தர் இணக்கம் தெரிவித்துள்ளார். அதையடுத்து புதிதாக தூபி அமைப்பதற்கு அடிக்கல்லும் நடப்பட்டது.

19

## ஆசிரியருக்கு தொற்று!

வவுனியா, ஜன.12

வவுனியா வடக்கு நெடுங்கேணி கல்வி வலயத்துக்கு உட்பட்ட அதிபர்கள்

20

### ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கு

## பிள்ளையானுக்கு எதிரான குற்றப்பத்திரிகை வாபஸ்!

கொழும்பு, ஜன.12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தை படுகொலை செய்த குற்றச்சாட்டில் கிழக்கு மாகாண

20

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)

# போத்தல் 'கள்' உற்பத்திக்கு 50 வீத வரிக்குறைப்பு

## இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

**சாவகச்சேரி, ஜன. 12**
**யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் போத்தல் கள்ளுக்கான வரி ஐம்பது வீதம் குறைக்கப்பட்டுள்ளது என்று அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னான்டோ கூறியுள்ளார் என்று யாழ்ப்பாணம் வருகை தந்து வரணியில் உள்ள தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க கொத்தணியின் தலைவர் க. துரைசிங்கம் தெரிவித்தார்.**

போத்தலில் கள் அடைத்து விற்பனை செய்யப்படும் நிலையில், தற்போது அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்படுகின்றன. எனினும், அதற்கு அரசு அதிகளவில் வரி விதித்ததால், உற்பத்தியாளர்களான சங்கங்கள் பெரும் நிதி இழப்பை எதிர்கொண்டன. அவற்றைக் குறைக்கவேண்டும் என்று கோரிக்கையும் விடுத்து வந்தன.
இந்த நிலையில், ராஜாங்க அமைச்சர் அண்மையில், வரணியில் உள்ள தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்துக்கு அண்மையில் சென்று பார்வையிட்டார். சங்கத்தினருடன் கலந்துரையாடினார். அதன்போது அரசு வரிக்குறைப்புச் செய்யவேண்டும் என்று கொத்தணித் தலைவர் க. துரைசிங்கம் கேட்டுக்கொண்டார்.
திறைசேரியுடன் கதைத்து உரிய நடவடிக்கை மேற்கொள்கின்றேன் என்று இராஜாங்க அமைச்சர் தெரிவித்திருந்தார். இந்தநிலையில் பிரதமர் மகிந்த ராஜபக்சவுடன் கலந்துரையாடி போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளுக்கு அறவிடப்படும் வரி 50 வீதம் குறைக்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் அறிவித்துள்ளார் என்று கொத்தணித் தலைவர் மேலும் தெரிவித்தார். (து-9)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி உடைக்கப்பட்டமையை அடுத்து மாணவர்கள் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ. சரவணபவன் போராட்ட இடத்துக்குச்சென்று மாணவர்களுடன் கலந்துரையாடினார். (தரி4)

## வியாபாரிகள் தங்கத் தடை!

சாவகச்சேரி, ஜன.12
சாவகச்சேரி மொகிதீன் பள்ளிவாசல் கட்டடத்தில் வெளியூர் வியாபாரிகள் தங்குவதற்கு, நகர சபையினர் தடை விதித்துள்ளனர்.
வெளி மாகாணங்களிலிருந்து வருகை தரும் முஸ்லிம் வியாபாரிகள், இந்தப் பள்ளிவாசல் கட்டடத்தில் தங்கியிருப்பது வழமை.
தற்போது கொரோனாத் தொற்றுப் பரம்பல் காணப்படுவதால் பலர், யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து, அங்குள்ள பள்ளிவாசல் கட்டடங்களில் தங்கியிருந்தனர்.
யாழ்.மாநகர சபையால் பள்ளி வாசல் கட்டடங்களில் வெளியூர் வியாபாரிகள் தங்குவது தடை செய்ததையடுத்து, அங்கிருந்தவர்கள், சாவகச்சேரி பள்ளிவாசல் கட்டடத்தில் தங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.
இதனையடுத்து பள்ளிவாசல் கட்டடத்தில் வெளியூர் முஸ்லிம் வியாபாரிகள் தங்குவதற்குத் தடை விதித்து, அதற்கான அறிவிப்பு பள்ளிவாசல் நிர்வாகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. (க-9)

## பி.சி.ஆர். பரிசோதனை மாதிரிகளில் சிக்கல்

கிளிநொச்சி, ஜன.12
பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில், கடந்த 8 ஆம் திகதி பெறப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகளில், நால்வரின் மாதிரிகளில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதனால் அவர்களிடம் மீளவும் மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.
வெளிநாடு செல்வதற்காக கொழும்பு சென்ற 11 பேர், பரிசோதனைக்காக மாதிரிகளை கொழும்பில் வழங்கி விட்டு முடிவுகள் கிடைக்க முன்னர், கிளிநொச்சி மாவட்டத்தை வந்தடைந்தனர்.
முடிவுகளில் மூவருக்குத் தொற்று என்று அறிவிக்கப்பட்டது. ஏனைய 8 பேரும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இதில் பூநகரியைச் சேர்ந்த 7 பேருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டது. பளை இத்தாவிலைச் சேர்ந்த நபருக்கு, கடந்த 8 ஆம் திகதி பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அவரின் மாதிரிகளில் முடிவுகள் பெறமுடியாது என்று அறிவிக்கப்பட்டது. கச்சார்வெளி, இயக்கச்சி மற்றும் கட்டைக்காட்டைச் சேர்ந்த மூவரிடம் பெறப்பட்ட மாதிரிகளிலும் முடிவு பெறமுடியாது என்று அறிவிக்கப்பட்டது. அதனையடுத்து நால்வரிடமும் மாதிரிகள் நேற்றுமுன்தினம் மீளப் பெறப்பட்டன. (க-6)

## மழைக்கு மத்தியிலும் பி.சி.ஆர். பரிசோதனை

வவுனியா, ஜன.12
கடும் மழைக்கு மத்தியிலும் வவுனியா பழைய பஸ் நிலையம் மற்றும் சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கம் உள்ளிட்ட 5 இடங்களில் வைத்து வர்த்தகர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.
வவுனியா நகர்பகுதியில் கடந்த வாரம் எழுமாறாக நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 55 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.
இதனையடுத்து வவுனியா நகர்ப் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் முடிவுகள் வெளியான பின்னரே வர்த்தக நிறுவனங்கள் திறக்க அனுமதிக்கப்படும் என்று வவுனியா சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஜ110)

## அத்துமீறிய இந்திய மீனவர்களை தனிமைப்படுத்த நீதிமன்று உத்தரவு

கொழும்பு, ஜன. 12
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 9 பேரையும் காரைநகர் கடற்படை முகாமில் அவர்களுடைய படகில், 15 நாள்களுக்கு தனிமைப்படுத்தி வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.
அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்யுமாறும் நீதிமன்று பணித்தது. (த25)

## 8,700 கிலோ மஞ்சளை கடத்தினரென 12 பேர் கைது

கொழும்பு, ஜன. 12
சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 8ஆயிரத்து 700 கிலோ கிராம் உலர் மஞ்சள் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது. கடற்படையின் வடமேற்கு கட்டளைப் பிரிவினரால் அண்மையில் வடமேற்கு கடல் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போதே இந்த உலர் மஞ்சள் கைப்பற்றப்பட்டது.
அதனைக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் வெளிநாட்டு பிரஜைகள் 12 பேர் கைதுசெய்யப்பட்டனர்.
இலங்கையின் வடமேற்கு கடல் பிராந்தியத்தில் சந்தேகத்துக்கிடமான இரண்டு படகுகளின் நடமாட்டத்தை ஜனவரி 8ஆம் திகதி அவதானித்த கடற்படை கட்டளையகம் அந்த படகுகளைச் சோதனைக்குட்படுத்தியது. அதன்போது 173 சாக்குகளில் கடத்தப்பட்ட உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டது. அவர்களது 2 படகுகளும்கை ப்பற ப்பட்டன. கைதுசெய்யப்பட்டவர்கள் சான்றுப் பொருள்களுடன் மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்க சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்ப ட்டனர் (து-ரி4)

## தொற்றாளரோடு தொடர்பை பேணியோருக்கு அறிவித்தல்

### மன்னார் மாவட்டச் செயலர் வேண்டுகோள்

மன்னார், ஜன.12
மன்னார் அரச பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள ஆடை விற்பனை நிலையத்தை நடத்தி வருகின்ற வர்த்தகர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவருடன் தொடர்பில் இருந்தவர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த மன்னார் அரச பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள ஆடை விற்பனை நிலையத்தை நடத்தி வருகின்ற வர்த்தகர் மன்னார் உப்புக்குளம் பகுதியில் வசித்து வந்ததால் அவருடன் தொடர்புடைய நபர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகளை சுகாதாரத் துறையினர் முன்னெடுத்து வருகின்றனர். ஆடை விற்பனை நிலையத்துக்குச் சென்ற, அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் உடனடியாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடன் தொடர்பு கொண்டு உடனடியாக பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றோம். அச்சம் கொள்ளாது பி.சி.ஆர். பரிசோதனைக்கு ஒத்துழையுங்கள் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு ஒவ்வொருவரும் தங்களையும் தமது குடும்பத்தையும், அயலவர்களையும் மாவட்டத்தையும், சமூகத்தையும் பாதுகாக்க சுகாதார துறையினருக்கு ஒத்துழைப்பு வழங்கவும் என்றார். (ஜ-56)

## கொரோனாவுக்கு இலக்கான தயாசிறி ஜனாதிபதி செயலகத்துக்கும் சென்றார்




கொழும்பு, ஜன. 12

கொரோனாத்தொற்றுக்கு இலக்காகியிருந்த இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஜனாதிபதி செயலகத்துக்கும் சென்றுவந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் கடந்த புத்தாண்டு தினத்தன்று தொடக்கம் 8ஆம் திகதிவரை சுமார் 500 பேருடன் நெருக்கமாக இருந்துள்ளார் என்றும் தெரிய வந்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடந்த சமய நிகழ்வில் பங்கேற்றும் இருக்கின்றார்.

அத்துடன், அதே தினத்தில் அவர் ஜனாதிபதி செயலகம் சென்று வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனிடையே அவருக்கு எங்கிருந்து தொற்று பரவியது என்பது பற்றிய தகவல் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (கு-இ)

வடக்கு, கிழக்குக்கு

# காணி, பொலிஸ் அதிகாரங்களை ஒருபோதிலும் வழங்கமாட்டோம்!

## போக்குவரத்து அமைச்சர் காமினி இறுமாப்பு

**கொழும்பு, ஜன. 12**

**வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரமல்ல வேறு எந்தவொரு மாகாணத்துக்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் ஒருபோதும் பிரித்து வழங்கப்படமாட்டாது. மாகாண சபை முறைமையில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அவை திருத்தப்பட்டு தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனப் பிரச்சினை என்று கூறிக் கொண்டு தமிழ் அரசியல்வாதிகள் அரசியல் இலாபம் தேடிக்கொள்கிறார்கள். தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்பவர்கள் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வுகாண எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்துமாறு ஆரம்ப காலத்தில் இருந்து பல தரப்பினரால் அழுத்தம் வழங்கப்படுகின்றது. 13ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்தினால் நாட்டில் மாறுபட்ட பல பிரச்சினைகள் தோற்றம்பெறும். காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் ஒரு மாகாணத்துக்கென மாத்திரம் பிரித்து வழங்கினால் அங்கு சுயாட்சித் தன்மையே நிலவும்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரமல்ல எந்த மாகாணங்களுக்கும் ஒருபோதும் பிரித்து வழங்கப்படமாட்டாது. இதற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் விதிவில க்கல்ல. ஏனைய மாகாணங்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள், சலுகைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் அனைத்தும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன என்றார். (ம)

கொரோனா அச்சத்தால்

# 21 எம்.பிக்கள் சுயதனிமையில்

கொழும்பு, ஜன. 12

கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற அச்சம் காரணமாக 21 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றியுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் அரசியல் விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்புச் செயலாளர் குமாரசிறி ஹெட்டிகே ஆகியோருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த 21 எம்.பிக்களே இவ்வாறு சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், சபாநாயகர் அலுவலக ஊழியர்கள் உட்பட மேலும் சிலரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். ரவூப் ஹக்கீமுடன் உரையாடலில் ஈடுபட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான தலதா அத்துகோரள, கயந்த கருணாதிலக்க ஆகியோருக்கு வைரஸ் தொற்றவில்லை என ஆரம்ப கட்ட பி.சி.ஆர் பரிசோதனை மூலம் தெரியவந்துள்ளது. (ம-44)

# ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் மாற்றமில்லை

## புதிய நிர்வாகக்குழு 13இல் தெரிவு

கொழும்பு, ஜன.12

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மத்தியசெயற்குழுக் கூட்டம் நாளை, 13 ஆம் திகதி கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சிறிகொத்தவில் நடைபெறவுள்ளது. இதில் கட்டாயம் பங்கேற்குமாறு தற்போது செயற்குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கட்சி மறுசீரமைப்பு, மற்றும் அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் உட்பட சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு இக் கூட்டத்தில் இறுதி முடிவுகள் எட்டப்படவுள்ளன. கட்சிக்கான பொதுச்செயலாளர் உட்பட நிர்வாகிகள் இதன்போது தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

எனினும், கட்சித் தலைவர் மற்றும் பிரதித் தலைவர் பதவிகளில் எவ்வித மாற்றங்களும் வராது என கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐ.தே.கவின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவும், பிரதித் தலைவராக ருவான் விஜேவர்தனவும் செயற்படுகின்றனர். கட்சியின் தலைமைப்பதவியை விட்டுக் கொடுப்பதற்கு தயார் என ரணில் முன்னர் அறிவித்திருந்தாலும் தற்போது இழுத்தடிப்பு செய்துவருகிறார் என விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டுள்ளன. (வ44)

## இராணுவ சிப்பாய் விபத்தில் சாவு

மட்டக்களப்பு, ஜன.12

மட்டக்களப்பு - பொலநறுவை பிரதான வீதியின் கதுறுவெலை அண்மித்த பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இராணுவச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். (வ-இ)

**கொரோனா தொற்று ஏற்படுவதை தடுப்பதற்கான...**

கொரோனா தொற்று ஏற்படுவதை தடுப்பதற்கான பலவிதமான முகக்கவசங்கள் (Face mask, Face Shied), பலவிதமான பாதுகாப்பு கவச ஆடைகள் (COVID 19 Kit), தொற்றுநீக்கி திரவங்கள் (Sanitizer 50ml, 100ml, 500ml, 5L மற்றும் Sanitize (Sodium Hypro Chloride) உள்ளிட்ட மற்றும் தொடுகையற்ற வெப்பமானி (Non Contact Thermometer-6755/=)

இவை தவிர ஆவிபிடிக்கும் உபகரணம் (Steam Inhaler) மற்றும் இதர உபகரணங்களுக்கு!

உங்களை நீங்களே பாதுகாத்து கொள்வதற்கு முகக்கவசம் அணியுங்கள். சமூக இடைவெளியை பேணுங்கள். அடிக்கடி கைகளைக் கழுவுங்கள். கொரோனாவிலிருந்து தூர விலகி இருங்கள்.

**வனிக்கா சேஜிக்கல்ஸ்**

**203, ஆஸ்பத்திரி வீதி (சத்திர சந்திக்கு அருகாமை) யாழ்ப்பாணம்.**

**தொ.இல:** 0212220077, 0774422367, 0775106910

**மின்னஞ்சல்**-vanisurgi@sltnet.lk

இறக்குமதியாளரும் விநியோகஸ்தர்களும்

எல்லாவித சத்திரசிகிச்சை உபகரணங்களும் / உடல்நல பாதுகாப்பு / பாடசாலை ஆய்வுகூட உபகரணங்களும் இரசாயனங்களும்.



# அனைத்து ரயில் சேவைகளும் பெப்ரவரி முதல் வழமைக்கு

கொழும்பு, ஜன.12

தூர இடங்களுக்கான ரயில் சேவை உட்பட அனைத்து ரயில் சேவைகளும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளுக்கு அமைய மீண்டும் ஆரம்பிக்கப்படும் என ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர் டிலந்த பிரனாந்து தெரிவித்தார். தூர இடங்களுக்கான ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் சுகாதார தரப்பினருடன் கடந்த சனிக்கிழமை பேச்சுவார்த்தை இடம்பெற்றது. அனைத்து ரயில் நிலையங்களதும் சுகாதார பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை சுகாதாரத் தரப்பினர் ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் பரிந்துரைத்துள்ள பாதுகாப்பு வழிமுறைகள் ரயில் சேவையில் முறையாக பின்பற்றப்படுகின்றன. சேவையில் ஈடுபட முன்னரும், சேவையில் ஈடுபட்ட பின்னரும் ரயில் கிருமித்தொற்று நீக்கல் செய்யப்படுகின்றன. ஆகவே ரயில் பெட்டிகள் சேவையை பயன்படுத்தும் பயணிகள் அச்சம் கொள்ள வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## 12 வயது சிறுமி சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஜன.12

மட்டக்களப்பு - பெரியகல்லாறு 02 பகுதியில் 12 வயது சிறுமி ஒருவர் காயங்களுடன் சடலமாக மீட்கப் பட்டுள்ளார். வறுமை காரணமாக தாய் வெளிநாட்டுக்கு பணிபுரிய சென்ற மையால் சிறுமி மனநிலை பாதிக்கப் பட்டிருந்தார் எனவும் தாயின் சகோதரியின் பராமரிப்பிலேயே அவர் வளர்ந்து வந்தார் எனவும் தெரியவருகிறது.

இந்த நிலையில் சிறுமி நேற்றுக் காலை சித்தியின் வீட்டிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக சிறுமியின் சடலம் களுவாஞ்சிகுடி ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (வ-இ)

# 1000 ரூபாவுக்கு மாற்றுத் திட்டம்!

### அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பேன் என்கிறார் நிமால் சிறிபால

பொலநறுவை, ஜன.12

தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு தொடர்பில் தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிமார் சம்மேளத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு எட்டப்படாததால் மாற்றுத் திட்டம் ஒன்றை நாளை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பேன் என தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கத்தின் பரிந்துரைக்கமைய தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுக்க கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற பேச்சுவார்த்தை இணக்கப்பாடின்றி முடிவடைந்த நிலையில், அடுத்தகட்டமாக மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ற-இ)



## போதைப்பொருள் அடங்கிய பொதி சிறைக்குள் மீட்பு

கொழும்பு, ஜன.12

களுத்துறை சிறைச்சாலையின் மதிலுக்கு மேலாக தடை செய்யப்பட்டுள்ள பொருள்கள் அடங்கிய பொதியொன்று எறியப்பட்டுள்ள நிலையில் அதனைப் பொலிஸார் மீட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தப் பொதியிலிருந்து 4 தொலைபேசிகள், 7 சிம் அட்டைகள், 10 கிராம் கேரளா கஞ்சா மற்றும் ஐஸ்போதைப் பொருள் அடங்கிய இரு பைக்கெற்றுகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (ச-இ)



## நாட்டில் நேற்றுமுதல் விசேட கண்காணிப்பு

### பொலிஸ்மா அதிபர் அதிரடி

கொழும்பு, ஜன.12

நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் விதிமுறைகள் முறையாக கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பது தொடர்பில் கண்டறிவதற்காக நேற்று முதல் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

நாட்டிலுள்ள அனைத்து நிறுவனங்கள், காரியாலயங்கள், வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட தொழில் ஸ்தானங்களிலும் பொதுப் போக்குவரத்தின் போதும், தனிமைப்படுத்தல் விதிமுறைகள் முறையாகக் கடைப்பிடிக்கபடுகின்றனவா என்பது தொடர்பில் கண்காணிப்பதற்கு நேற்று முதல் விசேட சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதில் சுகாதார பிரிவினருடன் பொலிஸாரும் இணைந்து செயற்படவுள்ளனர். பொது போக்குவரத்து தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது - என்றார். (ச-இ)

## அரசியல் கைதிகள் விடுதலை வேண்டி வடமராட்சியில் விசேட பூசை வழிபாடு

யாழ்ப்பாணம், ஜன.12

சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுதலை செய்து அவர்களை அவர்களது குடும்பத்துடன் இணைக்க வேண்டும் என வேண்டி வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் பொங்கல் விசேட பூசை வழிபாடு நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் கலந்து கொண்டார்.

தைப்பொங்கலுக்கு முன் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என சர்வமதப் பிரார்த்தனை கடந்த வாரம் 7 ஆம் திகதியில் இருந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-26)





காலாவதியாகிய

## சாரதி அனுமதிப்பத்திரம்; உபயோக காலம் நீடிப்பு?

கொழும்பு, ஜன.12

காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலத்தை மூன்று மாதங்களுக்கு நீடிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

தற்போதுள்ள கொரோனா தொற்று நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் சாரதி அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிக்க இயலாமையை கருத்தில் கொண்டு இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது என்று போக்குவரத்து சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பையும் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## தொழிலாளர் செயலகத்துக்கு வருவதை தவிர்க்கவும்

கொழும்பு, ஜன.12

ஊழியர் சேமலாப நிதியத்தின் பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளவும் அதற்கான விண்ணப்படிவங்களை ஒப்படைக்கவும் கொழும்பு நாரஹேன்பிட்டி தொழிலாளர் செயலகத்துக்கு வருவதைத் தவிர்க்குமாறு தொழில் ஆணையாளர் நாயகம் சட்டத்தரணி பிரபா சந்திரகீர்த்தி பொதுமக்களிடம் வலியுறுத்தியுள்ளார். கொரோனா அச்சத்தால் கூடுதலான மக்கள் பிரதான அலுவலகத்துக்கு வருவதைக் குறைப்பது இதன் நோக்கமாகும். ஊழியர் சேமலாப நிதியத்தின் கொடுப்பனவுகளுடன் சம்பந்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் நாடு பூராகவும் உள்ள மாவட்ட மற்றும் வலய அலுவலகங்களில் மேற்கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (வ-இ)

# ஓட்டமாவடியில் 36 பேருக்கு தொற்று!



மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில், ஓட்டமாவடிப் பிரதேச செயலாளர் பிரிவில் நேற்றுவரை 36 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று ஓட்டமாவடி சுகாதார மருத்துவ அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் ஏற்கனவே கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், அவர்களது உறவினர்கள் 84 பேருக்கு நேற்றுமுன்தினம் உலமா சபை கட்டடத்தில் செய்யப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் இரண்டு பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஓட்டமாவடி பிரதேச செயலக பிரிவில் கொரோனாத் தொற்றின் வேகம் அதிகரிப்பதைத் தடுக்கும் நோக்கில் பிரதேச செயலகம், பிரதேச சபை, இராணுவத்தினர், பொலிஸார், வர்த்தக சங்கத்தினர் ஆகியோர் சுகாதாரத் தரப்பினருடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர் எனவும் ஓட்டமாவடிச் சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (ற-150)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இடிக்கிற கைதான் ..!

“அடிக்கிற கைதான் அணைக்கும்” என்பது நேற்றோடு ‘இடிக்கிற கை தான் அமைக்கும்’ என்று மாறிவிட்டது. யாழ். பல்கலைக்கழகத்துக்குள் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி யாருடைய ஆணையின் பேரில் இடிக்கப்பட்டதோ, அதே துணைவேந்தரால் மீள அமைக்கப்படுவதற்காக அடிக்கல் நடப்பட்டிருக்கிறது.


உண்மையில் தூபியை இடிக்க உத்தரவிட்டது துணைவேந்தர் போன்று வெளிப்பார்வைக்குத் தோன்றினாலும் அவர் வெறும் அம்பு மட்டுமே. அவரை எய்தவர்கள் மிகக் கெட்டித்தனமாக பழியில் இருந்து தப்பித்துவிட்டார்கள். பாவம் ஓரிடம் பழி ஓரிடமானது. தூபி இடிப்போடு ஒட்டுமொத்த தமிழர்களும் பல்கலைக்கழகத் துணைவேந்தரை எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு சபித்துவிட்டார்கள். சமூக வலைத்தளங்களில் மீம்ஸ், கார்ட்டூன் என்று அவரை கழுவி ஊற்றினார்கள். ஆனால் நேற்று , மீண்டும் தூபியை அமைப்பதற்காக அடிக்கல் நாட்டியவுடன் துணைவேந்தரும் கறை நீங்கியவராகி விட்டார்.

எடுப்பார் கைப்பிள்ளையாக நடந்துகொண்டால், என்னென்ன விளைவுகள் வரும் என்பதை துணைவேந்தர் கண்கூடாகக் கண்டுவிட்டார். அத்தோடு யாரெல்லாம் தூபியை இடிக்கச் சொல்லி அவருக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்தார்களோ, அவர்களெல்லாம் தங்களுக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லாதது போல கழன்று கொள்ள, ஒட்டுமொத்தத் தமிழினத்தின் சுட்டு விரலும், துணைவேந்தரை நோக்கி நீண்டதால் உண்டான வலியையும் அவர் உணர்ந்திருப்பார்.

இனியாவது மேலிடத்து அழுத்தங்களுக்கு அடிபணியாமல், முன்னர் பலாலியிலே மாணவர்களுக்காக படையதிகாரிகளை எதிர்த்து முழங்கிய பழைய ‘சற்குணராஜாவாக’ அவர் கெத்தோடு பல்கலைக்கழகத்தை நிர்வகிக்க வேண்டும். துணைவேந்தர் மீது எவரும் முன்விரோதம் கொண்டோ, காழ்ப்புணர்ச்சியிலோ அவதூறுக் கற்களை வீசவில்லை. தமிழினப் படுகொலையின் ஆன்மாவின் மீது கைவைத்ததாலேயே எல்லோரது கோபப்பார்வையும் அவர் மீது திரும்பியிருந்தது. இப்போது அடிக்கல் நட்டதும் அந்தக் கோபம் இருந்த இடம் தெரியாமல் பறந்து விட்டது என்பதும் உண்மையே.

“மன்னிப்பவன் மனிதன், மன்னிப்புக் கேட்பவன் பெரிய மனிதன்’ என்று விருமாண்டி படத்திலொரு வசனம் வரும். அப்படியே துணைவேந்தர் தான் செய்த செயலுக்கு பிராயச்சித்தம் தேடமுனைந்தமை வரவேற்கப்பட வேண்டியதே. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று அதிகாரத் தோரணையோடு, பிடிவாதமாக நிற்காமல், தவறை உணர்ந்து அதனைச் சீர்செய்ய முனைவதற்கும் ஒரு மனம் வேண்டும். அது துணைவேந்தருக்கு வாய்த்திருக்கிறது. ஆனாலும் தூபி இடிப்பு விடயம் அவருக்கு ஒரு பாடம். எனவே வெறுமனே அடிக்கல் நாட்டியதோடு நின்றுவிடாமல், முள்ளிவாய்க்கால் தூபியை முறைப்படி அமைப்பதற்கான அனுமதியைப் பெற்றுக்கொடுத்து, மிக விரைவாக் அதனை நிறுவுவதே துணைவேந்தர் மீதான களங்கத்தை முற்றாகத் துடைக்கும். செய்வாரா ?

### இன்றைய கேலிச்சித்திரம்




நன்றி - அவந்த ஆட்டிகல

# எவரும் எப்போதும் தொற்றாளராகலாம்

* தீவிரமடைகிறது தொற்று
* உபகொத்தணிகளுக்கு வாய்ப்பு
* எச்சரிக்கிறது பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம்

கொழும்பு, ஜன.12
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தொற்று ஏற்பட்டுவரும் நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்று நிலையின் பாரதூரம் குறித்து தெளிவாகின்றது.

எனவே, அனைத்து தரப்பினரும் எப்போதும் கொரோனா கட்டுப்பாட்டுக்கு உண்மையான அர்ப்பணிப்பைக் காட்ட வேண்டியது அவசியம். இவ்வாறு பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் செயலாளர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையின் அரசியல்வாதிகள் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், நாம் எவ்வாறான பாதுகாப்பு விடயங்களைப் பின்பற்றினாலும் இன்றைய நிலையில், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு நபரும் தொற்றாளராக மாறும் சந்தர்ப்பம் அதிகம் உள்ளது. நாட்டின் ஏனைய பிரதேசங்க ளில் தொற்று நோய் விசேட வைத்திய நிபுணர்கள் அவர்களது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றாமை மற்றும், அந்தந்த பிரதேசங்களிலுள்ள தொற்றாளர்களின் முதல் நிலை தொற்றாளர்கள் தொடர்பான தகவல்களை வழங்காமை ஆகியன காரணமாக, நாம் அவர்களை தனிமைப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். இதேவேளை, கொரோனா பரவல் கொழும்பில் ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், கொழும்பைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கை எதிர்பார்க்காதளவு அதிகரித்துச் செல்கின்றது. எனவே கொழும்பை விட ஏனைய இடங்களில் கொரோனா உபகொத்தணிகள் பரவும் நிலையும் அதிகரித்துள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (நஇ)



## வாசுதேவவுக்கு கொரோனா

கொழும்பு, ஜன. 12
அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டார்.

முன்னதாக கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டப்பட்ட ரவூப் ஹக்கீமுடன் தொடர்பைப் பேணிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 21 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் வாசுதேவ நாணயக்காரவுக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களின் பணியாளர்கள் என 300 பேருக்கு அன்டிஜன் சோதனை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ம)

# இலங்கைக்குப் பயணம் செய்ய பாக்.பிரதமர் இம்ரான்கான் திட்டம்!

கொழும்பு, ஜன. 12
பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார். இந்தத் தகவலை இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் மஹ்முட் சாட் கட்டாக் வெளியிட்டுள்ளார்.

பாக்கிஸ்தான், உலகின் ஏனைய நாடுகளைப்போலவே இலங்கையின் இறையாண்மையை மதிக்கிறது. இலங்கையின் உள்ளக விடயங்களில் தலையிடுவதை விரும்பவில்லை. எனினும் பிரதமர் இம்ரான் கானின் கொழும்பு வருகையும் திட்டமிடப்பட்டுள்ளது. பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு சீனா வழங்கும் உதவிகள் தொடர்பில் தவறான விளக்கங்களும் தவறான பிரச்சாரங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# ஜனவரி மாத ராசிபலன்கள்






விறுவிறுப்பாக எதையும் செய்யும் திறன் படைத்த விருச்சிக ராசியினரே!

உங்கள் பேச்சில் வேகம் இருக்கும். இந்த மாதம் எல்லாவிதத்திலும் நன்மைகள் உண்டாகும். மனோ தைரியத்தைத் தரும். எதையும் துணிச்சலாக செய்து முடிப்பீர்கள். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். அந்நிய நபர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. எதிர்ப்புகள் நீங்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் அதிக உழைப்பின் மூலம் லாபம் கிடைக்கப் பெறுவார்கள். பொருளாதாரம் தொடர்பாக எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன்களைத் தரும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த பூசல்கள் அகலும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்தவொரு வேலையையும் கூடுதல் உழைப்பின் மூலம் செய்து முடிக்க வேண்டி இருக்கும். எதிர்பார்த்த பணியிட மாற்றம் மற்றும் பதவி உயர்வு தங்களைத் தேடி வரும்.

குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். எதிர்பார்த்த தகவல் நல்ல தகவலாக இருக்கும். கணவன் மனைவி இருவரும் எந்த முடிவையும் நிதானமாக யோசித்து எடுப்பது நன்மை தரும். அவசரத்தைத் தவிர்ப்பது நல்லது. சகோதரர் வழியில் உதவியை எதிர்பார்க்கலாம். உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

**பெண்களுக்கு:** எதிர்ப்புகள் நீங்கும். நெருக்கடியான நேரத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.

**கலைத்துறையினருக்கு:** பாராட்டுகள் வரும். வெளிநாட்டுப் பயணங்களும் இனிதே அமையும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். நண்பர்களிடையே உறவுநிலை சிறக்க விட்டுக் கொடுத்தல் அவசியம். கூட்டுத்தொழிலில் அதிகம் அக்கறை தேவை.

**அரசியல் துறையினருக்கு:**
நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினைகள் விலகும். எந்த விஷயத்திலும் பொறுப்புடன் செயற்படுவது நல்லது. திடீர்ச் செலவுகள் ஏற்படும். சிக்கன நடவடிக்கை அவசியம் தேவை. உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து அயராது பாடுபடுபவர்கள் அதிகப் பயன் பெறுவார்கள்.

**மாணவர்களுக்கு:** கூடுதலாக நேரம் ஒதுக்கி பாடங்களைப் படிப்பது வெற்றிக்கு உதவும். தேவையான உதவிகள் கிடைக்கும்.

**விசாகம் 4ம் பாதம்:**
இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததைத் சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணிபுரிவார்கள். சிலருக்கு புதிய பதவி அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்கப் பெறும். சிலர் குடும்பத்தை விட்டு வெளியே சென்று தங்க நேரிடலாம். கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும். விருந்தினர்கள் வருகை இருக்கும். வீட்டுக்குத் தேவையானப் பொருள்களை வாங்குவீர்கள். திருமண முயற்சிகள் சாதகமான பலன்களைத் தரும். பிள்ளைகளுடன் சந்தோஷமாக பொழுதைக் கழிப்பீர்கள்.

**அனுஷம்:**
இந்த மாதம் அடுத்தவர்களின் வேலைக்காக வீணாக அலைய நேரிடும். மனோ தைரியம் அதிகரிக்கும். எதிலும் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற முழுமூச்சாகப் பாடுபடுவீர்கள். புதிய நட்பு கிடைப்பதுடன் அவர்களது ஆலோசனையும் வெற்றிக்கு உதவும். ஆனால் எதிலும் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது.

**கேட்டை:**
இந்த மாதம் எதிர்பார்த்த காரிய அனுகூலம் உண்டாகும். கொடுக்கல் வாங்கல் சீர்படும். புதுமையான சிந்தனைகளும், சிறந்த கற்பனையாற்றலும் ஏற்படும். எனினும், எதிலும் கவனமாக இருப்பது நல்லது. திடீரென்று கோபம் வரும். ஏதாவது ஒருவகையில் அடுத்தவரின் ஏளனப்பேச்சுக்கு ஆளாகலாம். கவனம் தேவை. மற்றவர்கள் செய்கைகளால் மனவருத்தம் உண்டாகலாம். நீண்டநாள் இழுபறியாக இருந்து வந்த பிரச்சினை முடிவுக்கு வரும்.

## நிதி முறைகேடு: கைதானோர் தனிமையில்!!

கொழும்பு, ஜன.12

நிதி முறைகேடு தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஈ.ரி.ஐ நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர்கள் நான்கு பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

ஈ.ரி.ஐ நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர்களான ஜீவக எதிரிசிங்க, நாலக எதிரிசிங்க, அசங்க எதிரிசிங்க மற்றும் அஞ்சலி தீபா எதிரிசிங்க ஆகியோர் 6.4 மில்லியன் ரூபா பணத்தை மோசடி செய்தனர் என கடந்த வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் நால்வரும் கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதுடன், சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கினால், அவர்களுடான சாட்சியங்களுக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என மன்றில் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே நீதிவான் அவர்களை, இன்று செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க வேண்டுமென உத்தரவிட்டிருந்தார். அதற்கமையவே சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் கொவிட்19 வைரஸ் பரவல் அச்சம் காரணமாக இவர்கள் சிறைச்சாலைகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ற-இ)

## மைதானத்தை பலவந்தமாக அபகரிக்க ஈ.பி.டி.பி முயற்சி

*மீட்டுத்தருமாறு மக்கள் கோரிக்கை*

திருகோணமலை, ஜன.12

திருகோணமலை அனந்தபுரி பகுதியிலுள்ள விளையாட்டு மைதானமொன்றில், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பலவந்தமாக வேலி அமைக்க, ஈ.பி.டி.பி.யினர் முற்பட்டபோது அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மிக நீண்டகாலமாக அனந்தபுரி பகுதியிலுள்ள குறித்த மைதானம் அப்பகுதி இளைஞர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் குறித்த மைதானத்துக்கு பின்புறமாக உள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகத்தின் (ஈ.பி. டி.பி) காணிக்கு அருகே அந்தக் கட்சியினரால் நேற்றுக் காலை வேலி அமைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்தே அக் கட்சியினருக்கும் அப்பகுதி இளைஞர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மைதானமானது பல அரசியல் தலைமைகளது உதவியுடன் புனரமைக்கப்பட்டு, இளைஞர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இதனை அபகரிக்க பலர் முற்படுகின்றனர்.

மைதானம் இல்லாது போனால், இளைஞர்கள் பிழையான வழிமுறைகளுக்கு உட்படக்கூடும் என கவலை தெரிவித்துள்ள பிரதேச மக்கள், தகுந்த நடவடிக்கை எடுத்து மைதானத்தை மீட்டுத் தாருமாறும் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

## படைப்புழு பாதிப்புக்கு மதிப்பீட்டின் பின்னரே இழப்பீடு

கொழும்பு, ஜன.12

படைப்புழுத் தாக்கத்தால் சோளச் செய்கைக்கு ஏற்பட்டுள்ள சேதங்களுக்கான இழப்பீட்டை இந்தப் போகம் நிறைவுபெற்றதன் பின்னர் மதிப்பீடு செய்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார். அறுவடையின் பின்னரே சேதங்களை மதிப்பீடு செய்ய முடியும். எதிர்வரும் போகத்தில் ஒரே காலப்பகுதியில் சோளச் செய்கையை ஆரம்பிக்க விவசாயிகள் அறிவுறுத்தப்படவுள்ளனர். இம்முறை செய்கை தாமதமடைந்தமையும் இந்தப் படைப்புழுவின் தாக்கத்துக்கு ஒரு காரணமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)

## மண்சரிவு; மக்கள் பாதிப்பு

மாத்தளை, ஜன. 12

சீரற்ற காலநிலை காரணமாக உக்குவளை பிரதேச சபைக்குட்பட்ட எல்வல பகுதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதனால் 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், வீடுகளின் சுவர்கள் மற்றும் நிலத்திலும் வெடிப்புகள் ஏற்பட்டு, அப்பகுதியிலுள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (ரி5)

# இன்றைய நாள்



**மேடம்:** பலரது ஒத்துழைப்பால் நன்மை ஒன்று நிகழும். கனவு நனவாகும். உங்களது பொறுப்புகளை பிறர் பகிர்ந்து கொள்வர். மனநிம்மதி கூடும். சஞ்சலம் ஏற்படும்.

**இடபம்:** உங்களது செயலால் உங்களுக்கே சிரமம் ஏற்படக்கூடும். பிள்ளைகளால் சிறு சிரமங்கள் ஏற்பட்டாலும் அவர்களை மன்னிப்பீர்கள். உழைப்பு நன்மை தரும்.

**மிதுனம்:** உங்கள் திறமை தரும் வெற்றியால் புகழ் அதிகரிக்கும். தம்பதியர் இடையே புரிதல் ஏற்படும். எதிர்காலத் திட்டம் உருவாகும். சுமுக உறவு நிலவும்.

**கடகம்:** நண்பரிடம் எதிர்பார்த்த ஆறுதல் கிடைப்பதால் மகிழ்வீர்கள். உங்கள் முயற்சியால் சில நற்பலன்கள் கிடைக்கக்கூடும். நண்பர்களால் ஏமாற்றம் உண்டு..

**சிம்மம்:** தன்னம்பிக்கையின்றி இருந்த நீங்கள் அதிலிருந்து மெல்ல மீள்வீர்கள் பழைய தவறுகளால் ஏற்பட்ட மன உறுத்தல் நீங்கி நிம்மதி வரும். பணிபுரியும் பெண்களுக்கு ஆதரவு கிடைக்கும்.

**கன்னி:** உங்களின் முயற்சியால் பணியில் முன்னேற்றம் ஏற்படும். உங்கள் வாழ்வில் உதாரணமாக நினைப்பவரைச் சந்திப்பீர்கள். உங்கள் சுயத்தை இழக்காதீர்கள்.

**துலாம்:** சிலருக்கு புது வாகனம் வாங்கக்கூடிய யோகம் ஏற்படும். அரசின் உதவிகள் நீங்கள் எதிர்பார்த்தபடியே எளிதில் கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு பதவி, சம்பள உயர்வு உண்டு.

**விருச்சிகம்** முன்பு செய்த பயணம் ஒன்றின் பலனாக நன்மை விளையும். கடந்தகால அனுபவங்களால் உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சிறந்த முடிவுகளை எடுப்பீர்கள்..

**தனுசு** அன்பை வெளிப்படுத்தி மற்றவர்களின் மனங்களை வெல்வீர்கள். உங்கள் பெயர் பிரபலமாவதற்கு ஏற்ற நிகழ்ச்சிகள் நடக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**மகரம்** புதிய விஷயங்களைக் கற்று தவறுகளை மாற்றுவீர்கள் மனதுக்கு நெருக்கமானவர்களின் செயல் நெகிழ வைக்கும். சிறிய உடல் உபாதைகளைப் பொருட்படுத்த வேண்டாம்.

**கும்பம்:** வெளிநாடு செல்லும் யோகம் எதிர்பார்த்தபடி கைகூடும். பொறுமை காரணமாக நல்ல விஷயம் ஒன்றை அடைவீர்கள். புதிய திட்டங்களில் தடைகள், தாமதங்கள் ஏற்படலாம்.

**மீனம்:** அதிகாரிகளால் சிலருக்கு இடையூறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. தியாகம் செய்யும் மனப்பான்மையால் வெற்றி காண்பீர்கள். மற்றவர்களை மகிழ்வித்து மகிழ்வீர்கள். மனமாற்றம் ஏற்படும்.



யாழ்ப்பாணம் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில், 'சூம்', திறன் வகுப்பு செயலமர்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வின் வளவளராக ம. அகிலன் கலந்துகொண்டு ஆசிரியர்களுக்கான செயலமர்வை நடத்தினார். (ப-63)

# முட்டை உற்பத்தியாளர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு!

## பிரதமர் ஆலோசனை

கொழும்பு, ஜன.12

பெரிய மற்றும் சிறு அளவிலான முட்டை உற்பத்தியாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச கடந்த சனிக்கிழமை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்துக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சருக்கு ஆலோசனை வழங்கினார். பெரிய மற்றும் சிறு அளவிலான முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பணிப்பாளர் குழுவுடன் இணையத் தொழில்நுட்பம்



ஊடாக கலந்துரையாடிய போதே பிரதமர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார். இனப்பெருக்கம் செய்யப்படும் ஒரு கோழியின் விலையை 220 ரூபாவாக குறைத்தல், வருடத்துக்கு கொண்டு வரப்படும் தாய்க் கோழிகளின் எண்ணிக்கையை 80 ஆயிரத்துக்கு மட்டுப்படுத்தல், கோழித் தீவன கொள்வனவு மற்றும் களஞ்சியப்படுத்தலுக்கான கடன் நிவாரணம் பெறல், சட்ட விரோத இனப்பெருக்கம் செய்யும் நிலையங்கள் மூன்றினது செயற்பாட்டைத் தடை செய்தல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை முட்டை உற்பத்தியாளர்களின் சங்கத்தின் பணிப்பாளர் சபை இதன்போது பிரதமரிடம் முன்வைத்தது. (ற-இ)

# அரசின் தகனம் செய்யும் தீர்மானம் சர்வதேச பிரகடனத்துக்கு எதிரானது

## *மனித உரிமைகள் நிறுவகம் கண்டனம்*

கொழும்பு, ஜன.12

கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அவர்களது மதநம்பிக்கைக்கு மாறாக தகனம் செய்யும் அரசின் தீர்மானத்துக்கு சர்வதேச சட்டத்தரணிகள் அமைப்பின் மனித உரிமைகள் நிறுவகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், சடலங்களைத் தகனம் செய்வதை இஸ்லாம் மதம் ஒரு பாவமாகவும் மனித உடலுக்கு இழிவை ஏற்படுத்துவதாகவுமே நோக்குகின்றது. கொரோனாத் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு உலக சுகாதார ஸ்தாபனமும் அனுமதித்துள்ளது.

சடலங்களை அடக்கம் செய்வதால் மக்களின் சுகாதாரப் பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படப் போவதில்லை. இந்நிலையில் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான மத ரீதியான உரிமை இலங்கை முஸ்லிம்களுக்கு மறுக்கப்படும் பட்சத்தில், அது இலங்கை ஏற்கனவே ஏற்றுக்கொண்டிருக்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்துக்கு முரணானதாகவே அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)



## ஜனாஸா எரிப்புக்கு எதிராக

# ஆஸ்திரேலியாவில் கண்டனப் பேரணி

சிட்னி, ஜன.12

இலங்கையில், கொவிட் காரணமாக உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆஸ்திரேலியா வாழ் இலங்கை முஸ்லிம்களால் அமைதியான முறையில் கண்டன வாகனப் பேரணி துஆப் பிரார்த்தனையுடன் நடைபெற்றது. ஆஸ்திரேலியா சிட்னி நிவ் சவ்த் வேல்ஸ்(NSW) மாநிலத்தில் இயங்கிவரும் ஆஸ்திரேலியா இலங்கை முஸ்லிம் சம்மேளன (ALMA) நிர்வா கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இப் பேரணி இடம்பெற்றது. இதில் பெரும்பாலான ஆஸ்திரேலிய வாழ் இலங்கை முஸ்லிம்கள் பங்கேற்றனர். வாகன ஊர்வலத்தில் இணைந்துகொண்ட வாகனங்களிலும் ஜனாஸா எரிப்புக்கு எதிராக விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு எதிர்ப்பில் ஈடுபட்டமையைக் காணக்கூடியதாக இருந்தது. (ந)

# விசேட பூசை வழிபாடு

யாழ்ப்பாணம், ஜன.12

சுண்டிக்குளம் மேய்ச்சல் தரவையில் உள்ள கள்ளப்பட்டி பிள்ளையார் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அபிசேகங்களுடன் கூடிய கிராமிய விசேட பூசை வழிபாடும் அன்னதான நிகழ்வும் கால்நடை வளர்ப்போரால் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்றன.

இந்தப் பூசை வழிபாடானது கால்நடைகள் நோய் வாய்ப்படாமல் இருப்பதற்கும் நாட்டில் சீரான காலநிலை நிலவுவதற்கும் வருடா வருடம் மார்கழி மாத வெள்ளிக்கிழமை ஒன்றில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-21)





# பாடசாலைகளை ஒரேநேரத்தில் மீண்டும் திறப்பது ஆபத்தானதே

## திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு,ஜன.12**
**கொரோனாத் தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியில் பாடசாலைகள் அனைத்து ஒரே நேரத்தில் மீண்டும் திறப்பது கடும் ஆபத்துக்கு வழிவகுக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**




நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது; மாணவர்கள்மற்றும்ஆசிரியர்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிசெய்ய பாடசாலைகளை ஆரம்பிக்கும்முடிவை அரசாங்கம் மறு பரிசீலனை செய்யவேண்டும். அனைத்து பாடசாலை களுக்கும் சுகாதார வசதிகள் வழங்கப்படவில்லை. அவற்பெறைப் பெறுவதற்கான நிதி பாடசாலைகளிடம் இல்லை.

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதன் மூலம், நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது என்பதை சித்தரிக்கவே அரசாங்கம் முயற்சிக்கின்றது. இதனால்பாதிக்கப்படப்போவது மாணவர்களே என்றார். (ஐ-இ)

## சிறுவர். இளைஞர்களுக்கு இலவச கல்வி நிலையம்

யாழ்ப்பாணம்,ஜன.12

கொக்குவில் கிழக்கு கிராமத்தில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன், இரத்தினம் அறக்கட்டளை இலவசக் கல்வி நிலையம் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது. இங்கிலாந்திலுள்ள இரத்தினம் அறக்கட்டளை நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பினூடாக இந்த நிலையம் அமைக்கப்பட்டது.

கிராம அபிவிருத்திக் குழுத் தலைவர் சண்முகலிங்கம் பிறேமதாஸ் நிலையத்தைத் திறந்து வைத்தார். இங்கு கல்வி வகுப்புக்கள் மற்றும் கணனிப் பயிற்சி வகுப்புக்களில் மாணவர்கள் இணைந்து கொள்ளலாம்.

திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை மாலை 3.30 மணி தொடக்கம் 5.30 மணி வரையும், வார இறுதி நாள்களில் காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரையும் வகுப்புக்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கயந்த கருணாதிலக எம்.பிக்கு கொரோனாத் தொற்று இல்லை

கொழும்பு,ஜன.12

நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதில மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கடந்த 5 ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு வருகை தந்த சந்தர்ப்பத்தில் அவருடன் நெருக்கமான தொடர்பை பேணியவர் என்ற அடிப்படையில் கயந்த கருணாதிலக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர், தனது குடும்பத்தினருடன் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்டிருந்தார். இந்தப் பரிசோதனைக்கு அமைய அவருக்கும் அவரது குடும்பத்தவருக்கும் தொற்றில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ-இ)

## தொற்றாளர் உணவுண்ட உணவகத்துக்குப் பூட்டு

கிளிநொச்சி,ஜன.12

பளையில் உள்ள உணவகம் ஒன்றில், கொரோனாத் தொற்றாளர் ஒருவர் உணவு உண்டமையால், சுகாதாரத் துறையின் அறிவுறுத்தலுக்கு அமைவாக உணவகம் மூடப்பட்டுள்ளது.

கொடிகாமம் மட்டுவிலைச் சேர்ந்த நபர், வாகன உதவியாளராகக் கடமையாற்றி வருகிறார். அவருக்குக் கடந்த 8 ஆம் திகதி எழுமாற்றாக பி.சி.ஆர். பிரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. பரிசோதனையில் அவருக்கு கொவிட் 19 தொற்று உறுதி செய்யப்பட்டது. அதனையடுத்து, அவர் சென்ற வழித்தடங்கள் ஆராயப்பட்டன.

பளை நகரில் உள்ள உணவகத்தில் அவர் உணவு உட்கொண்டமை தெரியவந்தது. அதனையடுத்து உணவகம் மூடப்பட்டுள்ளது. உணவகத்தில் கடமையில் இருந்த இருவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களின் பரிசோதனை முடிவுகள் கிடைக்கப்பெற்றதும், ஏனைய தொழிலாளர்கள் தொடர்பாக முடிவு எடுக்க முடியும் என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர். (க-6)

## மொத்த வியாபாரச் சந்தை தற்காலிகமாக இடமாற்றம்

வவுனியா,ஜன.12

வவுனியாவின் மரக்கறி மொத்தக் கொள்வனவு மற்றும் விற்பனைச் சந்தை, எதிர்வரும் 20 ஆம் திகதி வரை கண்டி வீதியில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் செயற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட்19 காரணமாக வவுனியா நகரப்பகுதி, சுகாதார பிரிவினரின் ஆலோசனைக்கமைய முடக்கப்பட்டுள்ளது. மொத்த விற்பனைச் சந்தையும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் மரக்கறிகளைக் கொள்வனவு செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் வவுனியா காமினி வித்தியாலய மைதானத்தில் தற்காலிக ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

எனினும் கடந்த இரு தினங்களாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக, காமினி மகா வித்தியால மைதானம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

மாற்று ஏற்பாடாக இன்றிலிருந்து, எதிர்வரும் 20 ஆம் திகதி வரை மதவு வைத்தகுளத்தில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் சந்தைச் செயற்பாடுகள் இடம்பெறும்என்றுகமநலஅபிவிருத்தித்திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் அறிவித்துள்ளார். (க-110)

## நினைவுத்தூபி இடிக்கப்பட்டமைக்கு பிரதேச சபையில் கண்டனம்

கிளிநொச்சி,ஜன.12

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்டமைக்கு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை விசேட அமர்வில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தலைமையில் சபையின் விசேட அமர்வு, சபா மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது தவிசாளரால் இந்தத் தீர்மானம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (க-6)

## மீண்டும் இடம்பெயர்வு

சாவகச்சேரி,ஜன.12

பெய்துவரும் கடும் மழையால் தென்மராட்சியில் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தமது உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

கடந்த மாதம் பெய்த மழையால் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்கியிருந்தனர். தற்போது தமது வீடுகளைத் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்ட வேளையில், மழை மீண்டும் தொடர்வதால் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். (க-9)

## தென்மராட்சியில் 17 பேர் தனிமையில்

சாவகச்சேரி ஜன. 12

தென்மராட்சி பிரதேசத்தில் ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 17 பேர் கடந்த வாரம் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர் என்று சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்ஸில் பயணித்த வவுனியா வாசிக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அதில் பயணித்த ஒருவரின் வீட்டில் வதியும் 4 குடும்பங்களைச் சேர்ந்த எட்டுப் பேரும் ,காரைநகரில் இடம்பெற்ற மரணச் சடங்கில் கலந்து கொண்ட மேலும் இரு குடும்பங்களைச் சேர்ந்த ஐவரும் தனிமைப்படுத்தப்பட்டன.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து அத்தியாவசியப் பொருள்களுடன் வந்த வாகனத்தின் உதவியாளருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதனையடுத்து அவரது குடும்பத்தினர் 4 பேரும் எழுதுமட்டுவாழில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ-9)

## வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

வடமராட்சி,ஜன.12

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் சுகாதாரம், விவசாயம், கல்வி, வீதி அபிவிருத்தி ,மின்சாரம், போக்குவரத்து, மீன்பிடி மற்றும் ஏனைய உட்கட்டுமான வசதிகளின் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

கூட்டத்தில் கலந்துகொள்வோர் கொரோனாத் தொற்றுக் காரணமாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சமூகமளிக்குமாறு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (ஐ)

# விடுமுறைகள் இரத்தால் சிரமத்தில்தமிழ்ப் பொலிஸார்

யாழ்ப்பாணம் ஜன. 12

பொலிஸாரின் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் தைப்பொங்கல் தினத்தை குடும்பத்தினருடன் கொண்டாட முடியாத நிலை தமிழ்ப் பொலிஸாருக்கு ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக. பொலிஸாரின் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டதால் கடந்த மூன்று மாதங்களாக பொலிஸார் விடுமுறை பெறாமல் கடமையாற்றி வருகின்றனர்.

விடுமுறை பெற முடியாத நிலையில் தைப் பொங்கலுக்கு ஊருக்குச் செல்ல முடியவில்லை என யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் தமிழ்ப் பொலிஸார் கவலை தெரிவித்தனர்.

(ப-9)

# இலங்கையில் இந்தியா காலூன்றுவதை தடுத்து நிறுத்துவதில் சீனா பிரயத்தனம்!

## சீற்றம் கொண்டே ஜெய்சங்கரை கொழும்புக்கு அனுப்பியது டில்லி

கொழும்பு, ஜன. 12

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தைப் பெறும் முன்முயற்சிகள் மீதான எதிர்ப்புக்களை சீனாவின் புலனாய்வு முகவர்களே முன்னெடுக்கின்றனர் என்று இந்தியா கடும் சீற்றம் கொண்டுள்ளது.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் உள்ளடங்கலாக இந்தியாவின் விருப்பத்துக்குரிய திட்டங்கள் தொடர்பான எதிர்வினைகளை சீனா கையாள்கின்றது என்று இந்தியா கொண்டுள்ள ஆழ்ந்த அதிருப்தியின் காரணமாகவே இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ்குணவர்தன வெகுநாள்களுக்கு முன்னர் விடுத்த அழைப்பின் பிரகாரமே இந்திய வெளிவிவகார அமைச்சர் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு கொழும்பு வந்திருந்தார் எனக் கூறப்பட்டபோதிலும் வெறுமனே ஐந்து நாள்கள் கால அவகாசத்திலேயே இந்த அவசர பயணம் தீர்மானிக்கப்பட்டது என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுக கிழக்கு முனையம் அண்மைய பயணத்தின் முக்கிய பேசுபொருளாக இருந்த போதும் அதனைத் தாண்டியும் திருகோணமலையிலுள்ள எண்ணெய்க்குதங்கள் அபிவிருத்தி உட்பட மேலும் பல திட்டங்களைத் தாமதித்தல் அன்றேல் தடுத்து நிறுத்துவதில் சீனாவின் கரங்கள் நீண்டிருக்கின்றன எனவும் இந்தியா கவலை கொண்டுள்ளது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் உட்பட அர்த்தபூர்வமான அதிகாரப் பகிர்வு குறித்து இந்தியாவுக்குவழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவது இலங்கையின் சொந்த நலன்களுக்கு முக்கியமானது என்று இந்தப் பயணத்தின்போது ஜனாதிபதி கோத்தாபய, பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ; குணவர்தன ஆகியோரை இந்திய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தியிருந்தியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

13ஆவது திருத்தத்துடன் மாகாண சபைத் தேர்தல்களும் நடைபெற வேண்டும் என்பதையும் அவர் அவதானத்துக்குட்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-22)

### வர்த்தக நிலையங்களின்

# பெயர்ப் பலகைகளில் தமிழ்ப் பெயர்கள்

## கிளிநொச்சி தமிழ்ச்சங்கம் தீர்மானம்

**கிளிநொச்சி,ஜன.12**

**கிளிநொச்சி நகரில் இயங்கும் வர்த்தக நிலையங்களின் பெயர்ப்பலகைகளில் தமிழ்ப்பெயர்கள் இடம்பெற வேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நேற்றுக் காலை நடைபெற்றது. இதன்போதே தமிழ்ச் சங்கத்தால் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், இது தொடர்பில் கரைச்சி பிரதேச சபையிடம் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொதுக்கூட்டத்தில் கிளிநொச்சி தமிழ்ச் சங்கத் தலைவர் மருத்துவ கலாநிதி ஜெயராஜா, வாழ்நாள் தலைவர் இறைபிள்ளை, காப்பாளர் கமலநாதன் (வலயக்கல்விப் பணிப்பாளர்.கிளி.வலயம்) உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(ஐ-ரி1)

# அனுருத்த சம்பாயோவுக்கு பிணை

நீர்கொழும்பு சிறைச்சாலையின் முன்னாள் அதிகாரி அனுருத்த சம்பாயோ பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அனுருத்த சம்பாயோ உள்ளிட்ட சந்தேகநபர்கள் 7 பேருக்கு, நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 90 குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேற்படி குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ப)

# அரச சேவைகளைப் பெறுவதற்காக வெகு தூரம் நடக்க வேண்டிய நிலை

முல்லைத்தீவு, ஜன.12

முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு தேவைகள் நிமித்தம் செல்லும் மக்கள் 1.2 கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்றே தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டிய நிலை உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்ததாவது;

புதுக்குடியிருப்பு சந்தியில் இருந்து 1.2 கிலோ மீற்றர் தூரத்தில் பிரதேச செயலகம் இருப்பதால் புதுக்குடியிருப்பு சந்திக்கு பேருந்துகளில் வரும் மக்கள் பிரதேச செயலகத்துக்கு நடந்தே செல்ல வேண்டிய நெருக்கடி காணப்படுகின்றது . கடந்த காலங்களில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இந்தத் தகவல் தெரியப்படுத்தப்பட்டது. இதன்போது இரணைப்பாலை, ஆனந்தபுரம், மாத்தளன், வலைஞர்மடம், அம்பலவன் பொக்கணை ஆகிய இடங்களை உள்ளடக்கி குறுந்தூர பேருந்துச் சேவைகள் நடத்தப்பட்டு, மேற்படி கிராமங்களில் இருந்து புதுக்குடியிருப்பு மருத்துவமனை, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு நகரம் என்பவற்றுக்கு மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வந்து செல்வதில் காணப்படும் நெருக்கடிகளைப் போக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும் குறித்த வழித்தடத்தில் பேருந்துச் சேவைகள் இடம்பெறுவதில்லை. பேருந்துச் சேவைகள் இடம் பெறுமானால் நடந்து செல்கின்ற மக்களுக்கு சிரமம் ஏற்பட மாட்டாது என்றனர்.

(ப-ரி2)

# கனரக வாகனங்களிடமிருந்து அணைக்கட்டுக்கு விடுதலை



முல்லைத்தீவு, ஜன.12

முல்லைத்தீவு வவுனிக்குளம் அணைக்கட்டின் மீதான கனரக வாகனங்களின் போக்குவரத்துக்கான தடை நிரந்தரமாக்கப்பட்டுள்ளது என வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கை.பிரகாஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த 14 நாள்களுக்கு முன்னர் வவுனிக்குளத்தின் அணைக்கட்டின் மேலாகப் பயணித்த வாகனம் விபத்துக்குள்ளானதில் இரு சிறுவர்கள் உட்பட மூவர் உயிரிழந்தனர். இந்த நிலையில் கனரக வாகனங்கள் அணைக்கட்டின் மேலால் பயணிக்க முடியாது என அறிவிக்கப்பட்டது. தற்போது அணைக்கட்டின் மேலான கனரக வாகனங்களில் போக்குவரத்துக்கு மட்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது. உந்துருளிகள், மிதி வண்டிகள் பயணிக்க முடியும். அணைக்கட்டுகளைச் சீரமைப்பதிலேயே நெருக்கடிகள் காணப்படுகின்றன. முல்லைத்தீவு நீர்ப்பாசனப்பிரிவில் வவுனிக்குளம் முதன்மைக் குளமாக காணப்படுகின்றது. இந்தக் குளத்தின் அணைக்கட்டில் ஏற்படும் விபத்துகளையும் அணைக்கட்டு சேதமடைதலையும் தவிர்க்கும் பொருட்டு கனரக வாகனங்களுக்கான போக்குவரத்து தடை நிரந்தரமாக்கப்பட்டுள்ளது என்றார்.

(ப-ரி2)

# கொடிகாமம் சந்தையை மீளத்திறக்கவும்

## வியாபாரிகள் கோரிக்கை

கொடிகாமம்,ஜன 12


கொடிகாமம் சந்தையை மீளத் திறக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சந்தை மூடப்பட்டதால் தற்போது பெய்துவரும் மழைக்கு மத்தியில் வீதியோரங்களில் வியாபாரத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

பருத்தித்துறை வீதியில் தற்போது வீதி வேலைகள் இடம்பெற்று வரும் நிலையில் வீதியோரங்களில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதால் இருமருங்கிலும் வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. இதனால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதோடு, விபத்துக்களும் இடபெறுகின்றன. எனவே சந்தை வியாபாரிகள் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்க கூடிய வகையில் சந்தையை ஒழுங்குபடுத்தி அதனை மீளத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றனர்.

(ஐ-159)



# மக்கள் குடியமராத அரச வீடுகளை உடனடியாக கைமாற்றித் தாருங்கள்

## முல்லையில் நிரந்தர வீடற்றோர் கோரிக்கை



**முல்லைத்தீவு, ஜன12**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்பட்ட நிரந்தர வீடுகளில், குடியேறாத குடும்பங்கள் தொடர்பில் மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நிரந்தர வீடுகள் கிடைக்கப் பெறாத மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

2009ஆம் ஆண்டின் பின்னர் நலன்புரி நிலையங்களில் இருந்து மீள் குடியேற்றம் நடைபெற்று நிரந்தர வீடுகள் வழங்கப்பட்ட குடும்பங்கள் பல அந்த வீடுகளில் வசிப்பதில்லை. இது தொடர்பான தரவுகள் கிராம அலுவலர்களால் திரட்டப்பட்டு பிரதேச செயலகங்களில் கையளிக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் 500க்கும் மேற்பட்ட வீடுகளில் இவ்வாறு பலர் வசிக்காமல் உள்ளனர். வீடுகளைப் பெற்றுக் கொள்ளும்போது வீடுகளில் வசிப்போம் எனக் கூறியே வீடுகளைப் பெற்றவர்கள் தற்போது வீடுகளில் இருந்து வெளியேறி உள்ளனர். துணுக்காயின் உயிலங்குளத்தில் 50 வீடுகளில் பல குடும்பங்கள் வசிக்கவில்லை.

ஒட்டுசுட்டான் பணிக்கங்குளத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கென அமைக்கப்பட்ட 50 வீடுகளில் ஒருவர்கூடக் குடியேறவில்லை. இதுபோன்று கரைதுறைபற்று, புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வீடுகளில் மக்கள் இல்லை. அரசால் அமைத்து வழங்கப்பட்ட வீடுகளில் குடும்பங்கள் இல்லாமல் வீடுகள் சேதமடைகின்றன.

எனவே மாவட்டத்தில் நிரந்தர வீடுகள் கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ள 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அந்த வீடுகளை மாற்றி வழங்குவதற்கு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது நிரந்தர வீடுகளில் குடும்பங்களை இறுக்கமான நடைமுறைகளுடன் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் -என்றனர். (ப-ரி2)

# சேருவிலவில் தங்கப் புதையல்

திருமலை.ஜன.12

திருகோணமலை சேருவில பிரதேசத்தில் தங்கப் புதையல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று சுற்றுச் சூழல் அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் 54 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட நிலப்பரப்பில் தங்கப் புதையல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் இந்த விடயத்தை உறுதிசெய்துள்ளது.

பணியகத்தால் நடத்தப்பட்ட புதிய ஆய்வில் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புதையலில் தங்கத்துக்கு மேலதிமாக உலோகமும் உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (க-இ)

# 10 வருடங்களின் பின் வான்கதவுகள் திறப்பு

கொழும்பு.ஜன.12


பொலநறுவை மாவட்டத்தில், கன மழை காரணமாக பராக்கிரம சமுத்திரத்தில் 10 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

சுமார் 10 வருடங்களுக்குப் பின்னர் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்று பொலநறுவை வலய நீர்ப்பாசனப் பணிப்பாளர் ஹோவா கம தெரிவித்தார்.

அதனால் சமுத்திரத்தை அண்டிய பகுதியில் வாழும் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு அவர் கேட்டுள்ளார். (க)

# முல்லைத்தீவு-நந்திக்கடல் துப்புரவாக்கப்படவில்லை

## கடற்றொழிலாளர்கள் விசனம்



முல்லைத்தீவு, ஜன. 12

முல்லைத்தீவு நந்திக்கடலைத் துப்புரவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்று முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பத்து ஆண்டுகளாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலும் முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்திலும் நடைபெற்ற கூட்டங்களில் நந்திக் கடலைத் துப்புரவு செய்யுமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கைகள் விடுத்திருந்தனர்.

போர்க் காலத்தில் நந்திக் கடலை அண்மித்த பகுதியில் அமைக்கப்பட்ட மண் அரண்கள் நந்திக் கடலில் கரைந்தமை, முல்லைத்தீவின் முக்கிய குளமான முத்தையன்கட்டு உட்பட பல ஆற்றுப் படுகைகளால் வருகின்ற வெள்ளம் நந்திக் கடல் வழியாகவே கடலைச் சென்றடைகின்றமை என்பன காரணமாக நந்திக் கடல் ஆழம் குறைந்ததாக மாற்றப்பட்டிருந்தது. இதனால் முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திடம் தொடர்ச்சியாக விடுத்த கோரிக்கைகளுக்கமைய மாவட்டச் செயலகம் நந்திக் கடலைத் துப்புரவு செய்தல், வட்டுவாகல் பாலத்தைச் சீரமைத்தல் போன்ற வேலைகளுக்கான திட்டமிடல்களை தயாரித்து கொழும்புக்கு அனுப்பியது. இதனைச் செய்து முடிப்பதற்கு மில்லியன் கணக்கில் நிதி தேவைப்படும் என்றும் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மழை காலத்தில் மாவட்டச் செயலகம் 2 லட்சம் ரூபா செலவிட்டு வட்டுவாகல் பாலத்தின் அடைப்புகளை நீக்கியிருந்தது. ஆனால் இதுவரை நந்திக் கடலைத் துப்புரவு செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. வட்டுவாகல் பாலத்திலிருந்து வற்றாப்பளை பக்கமாக 600 மீற்றர் வரையான தூரமே துப்புரவுசெய்ய திட்டமிடலில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இந்தவேலைகள் இதுவரை இடம் பெறவில்லை. அதனால் நந்திக் கடலின் இறால் உட்பட கடல் வாழ் உணவுகளின் பெருக்கம் குறைந்து காணப்படுகின்றது. கோடை காலங்களில் வேகமாக நந்திக் கடல் வற்றிவிடுவதன் காரணமாக கடல் உயிரினங்கள் இறந்துவிடுகின்றன.

இந்நிலையில் நந்திக் கடலைத் துப்புரவுசெய்து தருமாறு நந்திக் கடலை நம்பியுள்ள 5 ஆயிரம் குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (து-ரி2)

# விவசாய மருந்துகள் கடையில் கொள்ளை!

முல்லைத்தீவு.ஜன.12

மாங்குளம் நகர், மல்லாவி வீதியில் அமைந்துள்ள விவசாய மருந்துக் கடையை உடைத்து, பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை நடந்துள்ளது. கடையின் உரிமையாளர் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொள்ளையிடப்பட்ட மருந்துகளின் பெறுமதி 18 இலட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காப்புறுதி நிறுவனங்கள் கணக்கீடு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (க-19)

# பாவனைக்குதவாத தேயிலை; இருவருக்கு தலா 30,000 தண்டம்

வலி.தென்மேற்கு, ஜன.12

காலாவதியான பெருந்தொகை தேயிலைப் பைக்கற்றுக்களை விற்பனைக்கு வைத்திருந்த இருவருக்கு தலா 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

ஈஸ்டர் தினத்தன்று கொழும்பில் நடைபெற்ற குண்டுவெடிப்பு சம்பவங்களை தொடர்ந்து, பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து யாழ்ப்பாணத்தில் சுற்றிவளைப்பு தேடுதலை மேற்கொண்டனர்.

இதன்போது நாவாந்துறை பகுதியில் உள்ள பள்ளிவாசலில் இருந்து பெருந்தொகையான தேயிலைப் பைக்கற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனையடுத்து பள்ளிவாசல் மௌலவி, நிர்வாகி உட்பட மூவருக்கு எதிராக ஆறு குற்றச்சாட்டுக்களுடன் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மூன்றாவது நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து நீதிவான் அவருக்கு ரூபா18 ஆயிரம் தண்டம் விதித்து விசாரணையை ஒத்தி வைத்தார்.

மேற்படி வழக்கு மீண்டும் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது ஏனைய இருவருக்கும் தலா 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (ஐ-115)



# பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு

கொழும்பு.ஜன.12

பாடசாலை வளாகங்களில் டெங்கு நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இன்று பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் டெங்குத் தொற்றாளர்கள் அதிகரித்துள்ள நிலையில், பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவு டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# கடலரிப்பில் சிக்கியுள்ள தாளைத்துறை கிராமம்

## தடுப்பணைகளை அமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.12

**யாழ். நெடுந்தீவின் கரையோரக் கிராமமான தாளைத்துறை கிராமம் கடலரிப்புக்கு உள்ளாகி கடலில் மூழ்கும் அபாய நிலை காணப்படுவதால், கிராமத்தை அண்டிய பகுதிக்கு கடல் தடுப்பணைகளை அமைத்து, கிராமத்தைப் பாதுகாக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

நெடுந்தீவின் கரையோரக் கிராமங்கள் பல கடலரிப்புக்கு உள்ளாகி வருகின்றன. இதிலும் குறிப்பிட்ட சில பகுதிகள் வேகமான கடலரிப்புக்கு உள்ளாகி வருகின்றன. இவற்றைப் பாதுகாக்க கடல் தடுப்பணைகளை அமைக்கவேண்டும்.

நெடுந்தீவின் பிடாரியம்மன் கோயிலடி முதல் காளவாய் முனைவரையான கரையோரப் பகுதிகளே அதிக கடலரிப்புக்கு உள்ளாகி வருகின்றன. இதிலும் தாளைத்துறைக் கிராமம் அண்மையில் ஏற்பட்ட புரேவிப் புயல் காரணமாக அதிக கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளது. எதிர்காலத்தில் எமது கிராமம் முழுமையாகவே கடலால் அரிப்புக்கு உள்ளாகும் அபாய நிலை காணப்படுகிறது.

கிராமத்தைப் பாதுகாக்கும் வகையில் கடந்த 1982ஆம் ஆண்டு கடல்நீர் தடுப்பணை ஒன்று அமைக்கப்பட்டது. தொடர்ந்து இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்களால் அது சேதமடைந்து தற்போது வீசிய புரேவிப் புயல் காரணமாக முழுமையாகவே அழிவடைந்துள்ளது.

இதேநேரம் கரையோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகுகளும் சேதமடைந்துள்ளன. எனவே உரியவர்கள் எமது கிராமத்தை பாதுகாக்கும் வகையில் தடுப்பணைகளை அமைத்துத்தரவேண்டும் என்றனர். (ப)

## வாள் வெட்டு காயங்களுடன் இளைஞன் மருத்துவமனையில்

சாவகச்சேரி ஜன. 12

வாள் வெட்டுக் காயங்களுக்கு உள்ளான இளைஞர் ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். வீதியில் வழிமறித்த கும்பல் ஒன்று அந்த இளைஞனை வாளால் வெட்டியது என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு அல்லாரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ப-9)



## பழுதடைந்த நிலையில் 8 உழவு இயந்திரங்கள்

### அவற்றின் பற்றரிகள் முன்னரே திருட்டு

முல்லைத்தீவு, ஜன.12

முல்லைத்தீவு துணுக்காய் கமநலசேவை நிலையத்தில் 8 உழவு இயந்திரங்களிலிருந்து மின்கலங்கள் (பற்றரிகள்) திருடப்பட்டிருந்த நிலையில், தற்போது அவை இன்னும் மோசமாகப் பழுதடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

2015ஆம் ஆண்டு மின்கலங்கள் உழவு இயந்திரங்களிலிருந்து திருடப்பட்டிருந்தன. இது தொடர்பாக துணுக்காய் கமநல சேவை நிலையத்தினர் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். பொலிஸார் விசாரணை மேற்கொண்டபோதிலும் எவருமே கைதுசெய்யப்படவில்லை. தற்போது அந்த உழவு இயந்திரங்களை முழுமையாக இயக்குவதிலும் நெருக்கடிகள் காணப்படுகின்றன. 2009 ஆம் ஆண்டின் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்வு இடம்பெற்று விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்திய அரசின் உதவியில் மேற்படி உழவு இயந்திரங்கள் கமநல சேவைநிலையங்கள் ஊடாக கமக்கார அமைப்புகளுக்கு வழங்கப்பட்டு விவசாயச் செய்கையில் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டன. தற்போது விவசாயிகளிடம் கூடுதலாக உழவு இயந்திரங்கள் காணப்படுகின்றமையால் கமநல சேவை நிலையங்களில் இந்திய அரசால் வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் பாவனையின்றியுள்ளன. தற்போது அவை பழுதடைந்துள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-ரி2)

## உப. தவிசாளரின் கையில் பூநகரி பிரதேச சபை

கிளிநொச்சி, ஜன.12

கிளிநொச்சி, பூநகரிப் பிரதேச சபையின் தவிசாளர் ஐயம்பிள்ளை ஒரு மாதகால சுகவீன விடுமுறையில் சென்றுள்ளதால் உப தவிசாளர் சி. சிறீரஞ்சன் தற்போதைய சபை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார். கடந்த சில மாதங்களாக தவிசாளருக்கும் பிரதேச சபைச் செயலாளருக்குமிடையில் புரிந்துணர்வின்மை காரணமாக சபையின் நிர்வாக நடவடிக்கைகள் ஸ்திரத்தன்மை இழந்து காணப்பட்டது. இந்த நிலையில் தவிசாளர் கடந்த முதலாம் திகதி தொடக்கம் ஒரு மாதகால சுகவீன விடுமுறையில் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-ரி1)

## உபஉணவு பயிர்ச் செய்கை கிளிநொச்சியில் முன்னெடுப்பு

கிளிநொச்சி, ஜன. 12

கிளிநொச்சிமாவட்டத்தில், காலநிலைக்கு சீரமைவான விவசாய செயற்றிட்டங்களூடாக ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம், மற்றும் ஜெயபுரம் ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் உபஉணவுச் செய்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.

அதனடிப்படையில், ஸ்கந்தரபுரம் விவசாயப் போதனாசிரியர் பிரிவு, வன்னேரிக்குளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவு மற்றும் ஜெயபுரம் விவசாயப் போதனாசிரியர் பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 400 கிலோகிராம் உழுந்து, 505 கிலோகிராம் பயறு, 500 கிலோகிராம் கௌபி, 4 ஆயிரத்து 740 கிலோகிராம் நிலக்கடலை, 65 கிலோகிராம் சோளம் என்பவை வழங்கப்பட்டு, பயிர்ச்செய்கைகள் நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)



## கிளி. யில் மண் வீதிகளிலும் சட்டவிரோத மணல் அகழ்வு

கிளிநொச்சி, ஜன.12

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் மண் வீதிகளில் இடம்பெறும், சட்டவிரோத மணல் அகழ்வால், பெரும்பாலான வீதிகள் சேதமடைந்துள்ளன என்று மக்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்ததாவது;

வட்டக்கச்சி பிரதேசத்தில் புதுக்காடு, மாவடியம்மன், மாயவனூர் போன்ற கிராமங்களின் மண் வீதிகளில் உள்ள மணல் சட்டவிரோதமாக அள்ளப்பட்டு உழவு இயந்திரங்கள் மூலம் கொண்டு செல்லப்படுகின்றது. மண் வீதிகளில் இவ்வாறு மணல் அள்ளிச் செல்லப்படுவதால் அந்த வீதிகள் மேலும் சேதமடைகின்றன. இதுதொடர்பில் சம்மந்தப்பட்ட பல தரப்பினருக்குத் தெரியப்படுத்தியும் வீதிகளில் இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்பவர்களைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது என்றனர். (ப-ரி1)

## இலங்கை உள்விவகாரங்களில் இந்தியா தலையிட முடியாது

### புதிய அரசமைப்பில் மாகாண சபை முறைமையை மாற்ற வேண்டும் என்று சரத் வீரசேகர வலியுறுத்து

கொழும்பு, ஜன. 12

இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுவதற்கு இந்தியாவுக்கு எந்த அருகதையும் கிடையாது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

'புதிய அரசமைப்பு தேர்தல் முறைமைகளில் மாற்றத்தை மேற்கொள்ளும். இதற்கமைய மாகாண சபை முறைமையையும் மாற்ற வேண்டும்' எனவும் அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,


இந்தியா எங்கள் நட்பு நாடு என்பது உண்மை. இந்தியா சர்வதேச அரங்கில் எந்த விடயத்தையும் எழுப்பலாம். ஆனால், அவர்கள் எங்களை அதனைச் செய்யுமாறு கூறி நிர்ப்பந்திக்க முடியாது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை எங்கள் மீது திணித்துள்ளார்.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறோ அல்லது மாகாண சபை தேர்தல்களை நடத்துமாறோ இந்தியா எங்களுக்கு அழுத்தம் கொடுக்க முடியாது.

இந்தியா யோசனைகளை முன்வைக்கலாம். ஆனால், நாங்களே தீர்மானிப்போம். நாட்டின் அரசியல் தலைவர்கள் தீர்மானிப்பார்கள்.

கொரோனா வைரஸ் காரணமாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை காணப்படவில்லை. அதனால் அரசு புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்வரை காத்திருப்பதற்குத் தீர்மானித்துள்ளது. புதிய அரச அமைப்பு தேர்தல் முறைமைகளில் மாற்றத்தை மேற்கொள்ளும். இதற்கமைய மாகாண சபை முறைமையையும் மாற்ற வேண்டும், என்றார். (ஒ.22)




## இருவேறு இடங்களில் பி.சி.ஆர்; 50பேருக்கு தொற்று இல்லை

சாவகச்சேரி, ஜன. 12

சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் கடந்த வெள்ளிக்கிழமை எழுதுமட்டுவாள் பொலிஸ் சோதனைச் சாவடி மற்றும் கொடிகாமம் நகரப் பகுதி ஆகியவற்றில் 51 பேருக்கு நடத்திய எழுமாறான பி.சி.ஆர்.பரிசோதனையில் வாகன உதவியாளரொருவர் தவிர்ந்த 50 பேருக்கும் கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாள் பொலிஸ் சோதனைச் சாவடியில் ஏ 9 வீதியில் பயணிகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவந்த வாகனங்களின் சாரதிகள் உதவியாளர்கள் என 28 பேருக்கும், கொடிகாமம் நகரப் பகுதியில் உள்ள வங்கிகள்,உணவகப் பணியாளர், தனியார் பேருந்துகளின் சாரதிகள் நடத்துநர்கள் ஆகிய 23 பேருக்கு என எழுமாறான பரிசோதனை நடத்தப்பட்டு பெறப்பட்ட மாதிரிகள் ஆய்வுக்காக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இவர்களில் வாகன உதவியாளர் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதுடன் ஏனைய 50 பேருக்கு தொற்று இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

## காணி உரிமை விவகாரம்; பெண் தாக்கப்பட்டு கொலை

கொழும்பு,ஜன.12

காணி உரிமை தொடர்பில் இரு தரப்பினருக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் தாக்குதலுக்கு உள்ளான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொரு பெண் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நிவித்திகலை - கரவிட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கரவிட்ட - பணுகல்பொத்த பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த பெண் மற்றும் காயமடைந்த பெண் ஆகிய இருவரும் இணைந்து காணி விவகாரம் தொடர்பில் எதிர்தரப்புடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இது மோதலாக மாறியதில் மது போதையிலிருந்த எதிர்தரப்பு நபரொருவர், அந்தப் பெண்கள் இருவரையும் இரும்புக் கம்பி மற்றும் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

இதன்போது படுகாமடைந்த பெண்கள் இருவரும் இரத்தினபுரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபரை கைதுசெய்துள்ள நிவித்திகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-இ)

## மருத்துவர்கள், நிபுணர்கள் இடமாற்றம்

சாவகச்சேரி ஜன. 12

சாவகச்சேரி, மருத்துவமனையில் கடமையாற்றிய பொது மருத்துவ நிபுணர் உட்பட மருத்துவர்கள் மூவர் இடமாற்றம் பெற்றுள்ளனர். அவர்களின் இடங்களுக்கு பொது மருத்துவ நிபுணர் உட்பட மருத்துவர்கள் மூவர் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்; சாவகச்சேரி மருத்துவமனையில் கடமையாற்றிய பொது மருத்துவ நிபுணர் மகாதேவன் மந்திகை ஆதார மருத்துவமனைக்கும், மருத்துவர்களான க.குமணன், அஜந்தன் ஆகியோர் யாழ். போதனா மருத்துவமனைக்கும் இடமாற்றப்பட்டுள்ளனர். யாழ்.போதனா மருத்துவமனையில் கடமையாற்றிய பெண் பொது மருத்துவ நிபுணர் மற்றும் இரு மருத்துவர்கள் அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டு சாவகச்சேரி மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்டு, கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். சுகாதார அமைச்சின் வருடாந்த இடமாற்றல் பட்டியலின் பிரகாரம் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ப-9)

## கேக் துண்டால் வந்தது வினை

கொழும்பு, ஜன.12



கொரோனா நோயாளி .யொருவரும் தாம் சாப்பிட்ட கேக் துண்டை 16 பேருக்கு ஊட்டியதால் சிக்கல் நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளது.

காலி சிறைச்சாலையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான சிறைச்சாலை பெண் அதிகாரி தனது வீட்டில் பிறந்த நாள் விருந்து ஒன்றை நடத்தியுள்ளார். அத்துடன் அயலவர் வீட்டில் நடந்த தானம் ஒன்றிலும் அவர் கலந்து கொண்டுள்ளார் என்று காலி மாவட்ட பிரதேச தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு மருத்துவர் வெனுர கே. சிங்கராச்சி தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை அதிகாரியின் மகனின் பிறந்த நாளுக்காக விருந்து நடத்தப்பட்டுள்ளது. மகனால் தாய்க்கு கேக் ஊட்டப்பட்டுள்ளது. அவர் தான் சாப்பிட்ட கேக் துண்டை 16 பேருடன் பகிர்ந்துள்ளார். அத்துடன் குறித்த அதிகாரி கலந்து கொண்ட தானம் வழங்கும் நிகழ்வில் 41 பேர் பங்கேற்றுள்ளனர் என்று தெரிய வருகிறது.

அத்தோடு குறித்த அதிகாரியால் விகாரையின் தேரர்களுக்கும் தானம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## இயங்க முடியாத நிலையில் முக்கொம்பன் பால் நிலையம்

கிளிநொச்சி, ஜன.12



**கிளிநொச்சி, பூநகரி முக்கொம்பன் பால் நிலையம் மிகக் குறைந்த பால் கொள்வனவுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்**

இது தொடர்பில் மக்கள் தெரிவித்ததாவது;

கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னர் கனடா அரசின் நிதி உதவியுடன் குறித்த பால் நிலையம் அமைக்கப்பட்டது. முக்கொம்பன், நேரடம்பன், அரசபுரம், சின்னப் பல்லவராயன்கட்டு, கிளிநொச்சியின் கண்ணகைபுரம் ஆகிய கிராமங்களின் கால்நடை வளர்ப்பாளர்களின் நலன்கருதி இப்பால் நிலையம் உருவாக்கப்பட்டது.

ஆனால் இந்த பால் நிலையம் தற்போது செயலிழந்து செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் அந்தப் பால் நிலையம் கால்நடை வளர்ப்பாளர்களிடம் இருந்து குறைந்த விலைக்கு பாலைக் கொள்வனவு செய்வதே ஆகும். இதனால் கால்நடை வளர்ப்பாளர்கள் குறித்த பால் நிலையத்துக்கு பால் வழங்க முன்வருவதில்லை. தனியார் நிறுவனங்கள் வாகனங்களில் வந்து கூடிய விலைக்கு பால் கொள்வனவு செய்கின்றபோது, அவர்களுக்கே கால்நடைவளர்ப்போர் பாலை வழங்குகின்றனர்.

கனடா அரசால் பால் உற்பத்திப் பொருள்களுக்கு வழங்கப்பட்ட சாதனங்களும் பயன்படுத்தப்படாமல் உள்ளன. குறித்த பால் நிலையத்தைச் சிறப்பாக இயக்குவதற்கு இதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றனர். (ஐ-ரி2)

## அனுமதியின்றி இயங்கிய கல்வி நிலையத்துக்கு சீல்

கிளிநொச்சி,ஜன.12

பளை நகரப் பகுதியில் அனுமதி இன்றி இயங்கிய, பிரத்தியேகக் கல்வி நிலையத்துக்கு, சுகாதாரத் துறையினரால் சீல் வைக்கப்பட்டது.

கல்வி நிலையத்தில் வகுப்புக்களை நடாத்துவதற்கு இதுவரை அனுமதிகள் வழங்கப்படவில்லை. எனினும் கொடிகாமம் பகுதியில் இருந்து வருகைதரும் ஆசிரியர் ஒருவரால் அங்கு கற்பித்தல் முன்னெடுக்கப்பட்டது.

இதனை அறிந்து அங்கு சென்ற பளை சுகாதாரத் துறையினர் கல்வி நிலையத்துக்குச் சீல் வைத்தனர். சம்பந்தப்பட்ட ஆசிரியரை 14 நாள்கள் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கல்வி கற்ற மாணவர்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## கசிப்புடன் இருவர் கைது



கிளிநொச்சி,ஜன.12

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கட்டைக்காடு பெரியகுளம் பகுதியில் செயற்பட்ட கசிப்பு உற்பத்தி நிலையம் நேற்றுமுன்தினம் முற்றுகையிடப்பட்டது. ஆயிரத்து 150 லீற்றர் கோடாவும் 105 லீற்றர் கசிப்பும், கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. மாவட்ட மது ஒழிப்புபொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து, நிலையம் முற்றுகையிடப்பட்டது. அங்கிருந்த இரண்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர். (க-113)

## லொத்தர் சீட்டில் மோசடி; ஒருவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜன.12

லொத்தர் சீட்டின் இலக்கங்களை சூட்சுமமாக மாற்றி பணம் பெற்று வந்த நபர் ஒருவரை, இலக்கங்கள் மாற்றப்பட்ட 36 லொத்தர் சீட்டுக்களுடன் விற்பனை முகவர் ஒருவர் மடக்கிப் பிடித்து கம்பளை பொலிஸ் நிலைய விசேட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

சந்தேகநபரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து இவர் நீண்ட காலமாக கண்டி நுவரெலியா உட்பட நாட்டில் மேலும் பல நகரங்களுக்குச் சென்று இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டார் என்று தெரிய வந்துள்ளது.


அவர் கம்பளை மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஸ்ரீநித் விஜேசேகர முன்னிலையில் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ப)

# முள்ளிவாய்க்கால் தூபி இடிப்பு: இயல்பை இழந்தது தாயகம்



யாழ்ப்பாணம்











பல்கலைக்கழகத் தூபி உடைப்பைக் கண்டித்து

## வைகோ தலைமையில் நேற்று இலங்கை தூதரகம் முற்றுகை

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ். பல்கலைக் கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு சின்னம் இடிக்கப்பட்டதைக் கண்டித்து மதிமுக பொதுச்செயலர் வைகோ தலைமையில் சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.

தூபி இடிக்கப்பட்ட மறுநாள் அதாவது கடந்த சனிக்கிழமையன்று சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம் முற்றுகையிடப்படும் என்று வைகோ அறிவித்தார். இந்த நிலையில் நேற்று இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் கலந்து கொண்ட பலர் கைது செய்யப்பட்டனர். (ம)

## நாடாளுமன்ற தொகுதியில் அன்டிஜன் பரிசோதனை!!


கொழும்பு. ஜன.12

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் இம் மாதம் 12 ஆம் மற்றும் 13 ஆம் திகதிகளில் ரெபிட் அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.


நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதமரின் இணைப்புச் செயலாளர் குமாரசிறி ஹெட்டிகே ஆகியோர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் கடந்த வாரம் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்துள்ளனர்.

இதனையடுத்தே நாடாளுமன்றத்துடன் தொடர்புபட்ட அனைவருக்கும் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நு-இ)

# முள்ளிவாய்க்கால் தூபி இடிப்பு: இயல்பை இழந்தது தாயகம்



வவுனியா






கிளிநொச்சி











மன்னார்










முல்லைத்தீவு





(19. 6.110. 150. 7)

சிங்கள மூலம் : மவ்பிம
தமிழில் வீ.எஸ்.ரி

# ஆபத்தான பாதையில் பயணிக்கின்றது அரசு



நாட்டின் தேர்தல் வரலாற்றில் காலாதிகாலமாக மறந்திட இயலாத கொள்கை நிலைப்பாடு, பௌத்த மதபீடம், சுதேசிய வைத்தியம், கல்வியியலாளர்கள், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் என்ற பஞ்ச மகா சக்திகளை முன்நிறுத்திய 1956ஆம் ஆண்டின் சுதந்திரக்கட்சியின் கொள்கை நிலைப்பாடே. இதனைத் தாண்டி தர்மத்தின் அடிப்படையிலான சமூகம், சுபீட்சமான எதிர்காலம், மகிந்த சிந்தனை, நல்லாட்சி என்பவை போன்ற பின்வந்த நிலைப்பாடுகளைப் பின்தள்ளத்தக்க ஆதரவுத்தளம் 1956 ஆம் ஆண்டின் பண்டாரநாயக்கவின் அந்தக் கொள்கை நிலைப்பாட்டுக்கு வாய்த்திருந்தது. பின்பு அரசை உருவாக்கியோரால் அரசுக்குப் பெரும் ஆதரவை வெளிப்படுத்தியோரால் பண்டாரநாயக்க கொல்லப்பட்டமை வேறுகதை.

நாட்டை முன்னேற்றுவது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, நியாயமான அரசியல் கலாசாரத்தைப் பேணுதல், சிறந்த நிர்வாகம், நியாயமான அரசியல் கலாசாரத்தை உருவாக்கவல்ல அரசமைப்பை ஏற்படுத்தல் என்பவை இன்று எம் முன்னுள்ள சவால்களாகும். ஆனால் நடைமுறையில் சந்தர்ப்பவாத அரசியலே எம் மத்தியில் தலைதூக்கியுள்ளது. 1965ஆம் ஆண்டுக்கு முன்னர் பதவிக்கு வந்த எந்தவொரு அரசும் தனது ஆட்சிக்காலத்தை முழுமையாகப் பூர்த்தி செய்ததில்லை. பஞ்சசீல ஆட்சியை முன்னிறுத்திய பண்டாரநாயக்கவின் ஆட்சிகூட இடைநடுவில் முறிந்து போனது. 1965இல் ஆட்சிக்கு வந்த அரசே தனது ஆட்சிக் காலத்தை முழுமையாகப் பூர்த்தி செய்தது.

**சிறிமாவோ என்.எம்.பெரேரா மோதல்**

1970ஆம் ஆண்டில் உருவான கூட்டு முன்னணி அரசு மீது நாட்டு மக்கள் கடும் நம்பிக்கை வைத்திருந்தனர். உலக வரலாற்றில் முக்கிய சாதனை நிகழ்த்திய நீல் ஆம்ஸ்ரோங்காலேயே செய்ய இயலாத, சந்திரனில் இருந்தாவது அரிசி கொண்டு வந்து தருவோம் என்ற அரசின் வாக்குறுதியை நம்பி நாட்டு மக்கள் 1970ஆம் ஆண்டில் பொதுத்தேர்தலில் கூட்டு முன்னணியை பதவியில் அமர்த்தினர். ஆனால் பிரதமர் சிறிமாவோ, நிதி அமைச்சர் எம்.எம்.பெரேரா ஆகியோர் மத்தியில் உருவாகி உக்கிரமடைந்த கருத்து மோதல் 1975ஆம் ஆண்டில் நிதி அமைச்சரைப் பதவியிலிருந்து பிரதமர் சிறிமாவோ வெளியேற்றும் நிலைவரை தீவிரம் கண்டது. கடைசியில் கூட்டு முன்னணி அரசை உருவாக்க உழைத்த இடதுசாரித் தரப்பினர் அரசினின்றும் வெளியேற நேர்ந்தது.

1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய ஜே.ஆரின் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசு லலித் அதுலத்முதலி, காமினி திஸநாயகா, ரணசிங்க பிரேமதாச, ரணில் விக்கிரமசிங்க போன்ற இளம் அரசியல் வாதிகளின் அரசியல் பிரவேசத்தை ஆரம்பித்து வைத்தது. உயர் கல்வித்தகமை கொண்டிருந்த லலித் அதுலத்முதலி மற்றும் காமினி திஸநாயக்க ஆகியோருக்கு மிகப் பொறுப்பான அமைச்சுப் பதவிகளை வழங்கிய ஜே.ஆர் அவர்களை அரசியலரங்கில் பிரபல்யம் பெறச் செய்தார். அதே வேளை நாட்டின் வறிய மக்கள் மத்தியில் தமது அப்பழுக்கற்ற சேவையால் ஏற்கனவே பிரபல்யம் ஈட்டியிருந்த பிரேமதாசவும் முக்கிய அமைச்சுப் பதவியைப் பெற்றிருந்தார்.

இம்மூவர் மத்தியிலும் அடிக்கடி அதிகார மோதல்கள் தலைதூக்கினாலும், அவை அரசின் இயக்கத்துக்கு பாதிப்பெதனையும் ஏற்படுத்தவில்லை. காலப்போக்கில் ஜே.ஆர்.தமது இறுக்கமான நிலைப்பாட்டைத் தளர்த்திக் கொண்டு ஐ.தே.கட்சியின் நிர்வாகத்தை பிரேமதாசவிடம் ஒப்படைத்ததோடு, ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகவும் பிரேமதாசவை முன்மொழிந்து ஐ.தே.கட்சி உடைந்து சிதறாமல் பார்த்துக்கொண்டார்.

பிரேமதாசவை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற வைக்க லலித் அதுலத்முதலியும் காமினி திஸநாயகவும் முன்னின்று செயற்பட்டனர். அதேவேளை பிரதமர் பதவியைத் தமதாக்கிக் கொள்ள இருவருமே எதிர்பார்த்திருந்தனர். கடைசியில் எங்கோ மூலையில் ஒதுங்கியிருந்த டி.பி.விஜேதுங்கவுக்கே பிரதமராகும் வாய்ப்புக்கிட்டியது. காமினி திஸநாயகவும் லலித் அதுலத்முதலியும் எதிர்பாராமல் திடீர் மரணத்தைத் தழுவிக்கொள்ள நேர்ந்தது. கடைசியில் 1994ஆம் ஆண்டில் ஐ.தே.கட்சியின் தலைமையிலான அரசும் ஆட்சி அதிகாரத்தை இழக்க நேர்ந்தது.

**அரசை உருவாக்கியோரே அவற்றைக் கவிழ்த்தனர்**

அரசை உருவாக்க முன்னின்று செயற்பட்ட அதிகாரத் தரப்பினரே அந்த அரசு பதவி கவிழ்க்கப்படுவதற்குக் காரணமாக ஆகினர். இவ்விதத்திலேயே எல்லாவற்றுக்கும் மேலாக அரசுக்களை நாசப்படுத்தியவர்கள் அந்தந்த அரசுகளின் நெருங்கிய நண்பர்களாகச் செயற்பட்டவர்களே.

1970-77 வரை பதவி வகித்த சிறிமாவோவை வீட்டுக்கு அனுப்பி வைக்க எஸ்.டி.பண்டாரநாயக்க காரணமானார். 1994-2000 வரை பதவி வகித்த அரசைக் கவிழ்க்க எஸ்.பி.திஸநாயக்க தரப்பினர் காரணமாகினர். 2000ஆம் ஆண்டில் ரணில் தலைமையிலான அரசு பதவியிழக்க பாஸ்கரலிங்கம் தரப்பினர் காரணமாயினர். மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு, பி.பி.ஜயசுந்தர தரப்பினர் போன்றே, சோதிடர்களினாலும் பதவியை பறிகொடுக்க நேர்ந்தது. நல்லாட்சி அரசு அர்ஜுன் மகேந்திரனால் அதிகாரத்தை இழக்க நேர்ந்தது. அப்படியானால் இன்றைய அரசின் வீழ்ச்சிக்கு யார் காரணமாகப் போகின்றனர்.

**கோத்தாபய அரசுக்கு எழுந்துள்ள எதிர்ப்பு!**

இன்றைய அரசு கொண்டுவர முயற்சித்த 'வியத் மங்க' செயற்றிட்டமே இந்த அரசைப் பதவியிழக்க வைக்கப்போகிறதா?. இன்று அரசின் நீதி அமைச்சர் 'சப்ரி' அரசுக்குத் தலைவலியாக ஆகியுள்ளார். தானே வெளியிட்ட வர்த்தமானியை இரத்துச்செய்ய, புதிதாக வர்த்தமானியை அரசு வெளியிட நேர்கிறது. கடந்த டிசெம்பர் மாதம் 14ஆம் திகதி அரசு வெளியிட்ட இறக்குமதி வரிக்குறைப்பு வர்த்தமானி அறிவிப்பால் குறிப்பிட்ட நிறுவனமொன்று 175 மில்லியன் ரூபா இலாபம் ஈட்டிக் கொண்டதாகக் கூறப்படுகிறது. இதே போன்று தேங்காயெண்ணை இறக்குமதிக்கான இறக்குமதி வரி தொடர்பாக அரசால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ஒரு மாத இடைவெளியின் பின்னர் இரத்துச் செய்யப்பட்டு புதிதாக வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டதன் மூலம் குறித்த நிறுவனத்தால் இடைப்பட்ட அந்தக்கால இடைவெளிக்குள் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணையால் அந்த நிறுவனம் பெருந்தொகைப் பணத்தை ஈட்டிக்கொள்ள முடிந்தது.

இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் பௌத்த மத பீடங்கள் குழம்பிக்கொள்ளும் நிலையால் இன்றைய அரசு தறுக்கணித்துப்போக வாய்ப்புக்கள் அதிகமுள்ளது. தென் ஆசியாவிலேயே மிகப் பெரிய இறைச்சி பதனிடும் தொழிற்சாலையை உருவாக்க நாம் இடமளியோம் என்கிறார் பௌத்த மத பீடமொன்றின் தலைவர். மாகாண சபைத் தேர்தலை வெளிநாடுகளைத் திருப்திப்படுத்து வதற்காகவா இந்த அரசு நடத்தப் போகிறது எனக் கேள்வி எழுப்புகிறார் மற்றொரு பௌத்த மத பீடத் தலைவர். பசுக்களை கொல்லும் செயற்பாடு ஜனாதிபதியின் கொள்கை நிலைப்பாட்டுக்கு மாறானது என கொதிக்கிறார் ஆனந்த சாகர தேரர். எமது நம்பிக்கையைச் சிதறடித்தால் ஜனாதிபதியைப் பதவியிலிருந்து அகற்றுவோம் என மிரட்டுகிறார் மத்துகம குணரத்ன தேரர். கொரோனாவால் இறந்தவர்களின் உடலங்களைப் புதைக்க அனுமதித்தால் அது அரசின் வீழ்ச்சிக்கு வழி வகுக்கும் என ஆக்ரோசப்படுகிறார் மதகொட அபயதிஸ்ஸ தேரர். 1948ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுபோன்று பொய் கூறும் எந்தவொரு அரசும் பதவி வகித்ததில்லை என்பது அல்லே குணவன்ச தேரரது குற்றச்சாட்டு. இவ்வாறெல்லாம் இன்றைய அரசு மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கும் இந்தப் பௌத்த மதத்தலைவர்களே இந்த அரசைப் பதவியில் அமர்த்த முன்னின்று உழைத்தவர்கள். இந்த அரசை பதவிக்குக்கொண்டு வர முன்னின்று செயற்பட்ட பௌத்த மதத் தலைவர்கள் அனைவரும் இன்று ஒரே குரலில் இன்றைய அரசை கடுமையாக விமர்சித்து வருகின்றனர். அப்படியானால் இன்றைய அரசுக்கு என்ன ஆகப்போகிறது என்றகேள்வி மக்கள் மத்தியில் தலைதூக்குகிறதல்லவா?

இன்றைய அரசு கொண்டு வர முயற்சித்த 'வியத் மங்க" செயற்றிட்டமே இந்த அரசைப் பதவியிழக்க வைக்கப்போகிறதா? இன்று அரசின் நீதி அமைச்சர் 'சப்ரி' அரசுக் குத் தலைவலியாக ஆகியுள்ளார். தானே வெளியிட்ட வர்த்தமானியை இரத்துச்செய்ய, புதிதாக வர்த்தமானியை அரசு வெளியிட நேர்கிறது.

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

## கிருஸ்ணபிள்ளை நிதர்சன்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 . 10 . 1995 | 12 . 01 . 2019 |

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல்
பாக்கியவான்கள் - அவர்கள் தங்கள்
பிரயாசங்களை விட்டொழிந்து -
இளைப்பாறுவார்கள்
அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே
கூடப்போம்.

கால நதியில் கரைந்தே ஆண்டு
இரண்டு ஆனதேடா!
இளமைப் புயல் வீசும் போதே
கால தேவன் அணைத்ததேனடா?
குடும்பத்தின் செல்லப்பிள்ளையே
உன் அன்னை நிதம் கலங்குகிறாள்
உன் மனைவி நிதம் ஏங்குகிறாள்
உன் முகம் பாரா உன் குழந்தையோ
உன்னைக் காணத் துடிக்கின்றது.
உன் சகோதரம் கலங்குகின்றது
மாறாத சோகத்துடன்
மனமுருகிப் புலம்புகின்றோம்
எம்மை ஏங்கித் தவித்தே
நிதம் புலம்பவிட்டு
எங்கு சென்றாயடா?

உன்னை மீண்டும் சந்திப்போம்
என்ற நம்பிக்கையில்

குடும்பத்தினர்.

83, பூம்புகார், அரியாலை, யாழ்ப்பாணம்.
076 2972 761

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 . 02 . 1940 | 10 . 01 . 2021 |

## கந்தையா திருநாவுக்கரசு

(முன்னைநாள் தீ தடுப்பு உத்தியோகத்தர் (Fire prevention officer) யாழ் மாநகரசபை)

மலேசியாவை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு, கொக்குவில், கொழும்பு, பிரித்தானியா Croydon ஆகிய இடங்களை வதிவிடமாக கொண்டவருமான கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் கடந்த (10.01.2021) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா கந்தையா-கந்தையா பொன்னம்மா தம்பதிகளின் அருமை மகனும், தாமோதரம்பிள்ளை-இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், புஸ்பராணி அவர்களின் அன்புக் கணவரும், முகுந்தன் (பிரித்தானியா-Croydon), யாழினி முரளீதரன் (சிட்னி-அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெசோதினி முகுந்தன் (பிரித்தானியா), பாலசுப்பிரமணியம் முரளீதரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், இறையடி சேர்ந்தவர்களான இரத்தினேஸ்வரி நவநாதன் (கொழும்பு), சரஸ்வதி இரத்தினசிங்கம் (கனடா), மற்றும் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் (அவுஸ்திரேலியா), ஆகியோரின் பாசமிக்க சகோதரரும், ஈசனடி பற்றிய நவநாதன் மற்றும் இரத்தினசிங்கம், இறையடி சேர்ந்த பாலசுப்பிரமணியம் மற்றும் நடராசா செல்வராணி, கணேசன் ஜெயராணி, ஸ்ரீகாந்தன், ஸ்ரீபாலா, ஸ்ரீநேசா, ஸ்ரீரவீந்திரா ஆகியோரின் மைத்துனரும், சிவகுமாரன், சாந்தகுமார், சுகுமார், ரஞ்சினி ஜெபநேசன், ரவீந்திரன், ரவிச்சந்திரன், வத்சலா பகீரதன், முரளீதரன் ஆகியோரின் பாசமிகு தாய்மாமனாரும், ஆதவன், விதுஷன், யதுஷன், மதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
மகன்: முகுந்தன் (பிரித்தானியா)
00447725849829
மகள்: யாழினி முரளீதரன் (அவுஸ்திரேலியா)
0061416330080

தகவல்:
குடும்பத்தினர்.

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## சண்முகலிங்கம் லதுர்ஜிகாந் (லது)

(உரிமையாளர் - வதனி ஜுவல்லரி, கொடிகாமம்)



| மண்ணில் | விண்ணகம் |
|---|---|
| 16.08.1976 | 14.01.2010 |

திதி:- சதுர்த்தசி



நிஜமாக நீங்கள் மறைந்து
பதினொரு ஆண்டுகள் ஆனதோ!
நீங்கள் இல்லா மனை
பொலிந்து போனதுவோ!
உங்களை நினைத்து - தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் - உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்.

பொற்றொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்



தமிழ் இணையக் கல்விக்கழகத்தினூடாக தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி (B.A) தமிழியல் (Tamilology) சிறப்புப் பட்டம்!

- தொழில் வாய்ப்பா? பதவியுயர்வா? அனைவரும் விண்ணப்பிக்கலாம்
- க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி (பழைய பாடத்திட்டம் 4 பாடங்களில்)
- உயர்தரத்தில் எத்துறையில் பயின்றவர்களும் பட்டப் படிப்பைத் தொடர முடியும்.
- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (University Grants Commission) அங்கீகரிக்கப்பட்டது.

2021 - 2023 ஆம் கல்வியாண்டுக்கான விரிவுரைகள் பெப்ரவரி மாதம் Zoom ஊடாக ஆரம்பமாகும்.

பதிவுகளை மேற்கொள்ளும் இறுதி திகதி 25.01.2021 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**வவுனியாவில்**

தமிழ் இணையக் கல்விக்கழகம்
பாரதி இன்ஸ்ரிரியூட்
A9 வீதி, புளியங்குளம்.
071 315 6109

**யாழ்ப்பாணத்தில்**

தமிழ் இணையக் கல்விக்கழகம்
பாரதி இன்ஸ்ரிரியூட்
மீசாலை மேற்கு, மீசாலை, சாவகச்சேரி.
077 805 1173, 070 305 1173


# பிரதான பொலிஸ் பரிசோதகர்களாக 150 சட்டத்தரணிகள் நியமனமாவர்

கொழும்பு. ஜன. 12

பொதுமக்களுக்கு சட்டத்தை நெருக்கமாக்குவதற்கும் பொலிஸாரால் பெற்றுக்கொடுக்கப்படும் சேவையை மேலும் செயற்றிறனாக்கும் நோக்கிலும் 150 சட்டத்தரணிகளை பிரதான பொலிஸ் பரிசோதகர்களாக நியமிக்க நீதி அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார் என்று நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக நீதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அமைச்சரவையின் அனுமதி கிடைத்தவுடன் அவர்களுக்கு நேர்முகப்பரீட்சை மேற்கொள்ளப்படும். அவர்களுக்கு இருக்கும் திறமையின் பிரகாரம் பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அவர்களை இணைத்துக்கொண்ட பின்னர் அவர்கள் 9 மாகாணங்களிலும் சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவர். அவர்களுக்கு சட்டம் மற்றும் பொலிஸ் சேவை தொடர்பில் விசேட பயிற்சி வழங்கப்படும். அவர்கள் தமிழ் மொழி தொடர்பில் விசேட அறிவை பெற்றிருப்பதை விசேட தகுதியாகக் கருதப்படவேண்டும். என்றார். (தஇ)


**பணிப்பெண் தேவை**

கொழும்பில் தங்கியிருந்து சமையல், வீட்டு வேலை செய்யக்கூடிய பெண் ஒருவர் தேவை. வயதெல்லை 35-45. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு : 075 8388 236



A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியரே!
வெளிநாடுகளுக்கு செல்ல இருக்கும் மங்கையரே!!
மற்றும் ஆர்வமுள்ள மகளீரே!!!

உங்களுக்கான 3 மாதகால பயன்மிகு பயிற்சிகள்
28.01.2021 தைப்பூசத்தன்று காலை 9.30 க்கு ஆரம்பம்!

☆ கேக் ஐசிங் ☆ கூந்தல் அலங்காரம் ☆ Makeup
☆ Facial ☆ பல விதங்களில் சேலை அணியும் முறைகள்
☆ சிற்றுண்டிகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு உணவுகள் தயாரித்தல்

- பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.
- இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவிகளுக்கு கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்.
- சனி - ஞாயிறு அல்லது கிழமை நாள் பிரிவில் இணையலாம்

மேலும் விபரங்களுக்கு நேரில் வருகை தரவும்!

**யாழ் கலாலயா பயிற்சியகம்**

இலங்கையின் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) அங்கீகரிக்கப்பட்டது.

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் போதனா வைத்தியசாலையின் பின் வீதி)


## யானை தாக்கி விவசாயி சாவு

கொழு., ஜன. 12

மெதிரிகிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமகிபுர பகுதியில் நேற்று அதிகாலை காட்டு யானையை விரட்டுவதற்கு முற்பட்ட விவசாயி ஒருவர், அந்த யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதே பகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய விவசாயியே உயிரிழந்தார்.

காட்டு யானை ஒன்று தனது தோட்டத்துக்குள் அத்துமீறி நுழைந்து, பயிர்களை சேதப்படுத்திக் கொண்டிருப்பதை அவதானித்த விவசாயி, அதனை விரட்டமுற்பட்டுள்ளார். இதன் போது, குழப்பமடைந்த யானை அவரைத் தாக்கியுள்ளது என பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (தஇ)


## 23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 . 01 . 1944 — உதிர்வு 18 . 12 . 1998



அமரர் சின்னப்பொடி திரவியம்

திதி: அமாவாசை

நாள்கள் பல கடந்தும் வருடங்கள் ஆனாலும்
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
ஆறவில்லை எம் இதயம் எம் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் என்றும் எம் நினைவில்
உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.

சாந்தா தோட்டம், ஆவரங்கால், புத்தூர். — குடும்பத்தினர்



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 06 . 12 . 1946 — இறப்பு 25 . 12 . 2019



அமரர் திருமதி **பவானி மருதவாணர்**

ஒரு குடும்ப பாச விளக்காய்
ஒரு கூட்டுக் கிளியாக
எம்மோடு வாழ்ந்து
எம்மை எல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த உங்களை
நாம் எண்ணாத நாளில்லை அம்மா!

நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 . 04 . 1961 — மறைவு 25 . 12 . 2019



எமது குடும்பத்தின் குலவிளக்காக விளங்கிய
**அமரர் ஸ்ரீகாந்தலக்ஷ்மி அருளானந்தம் சிவநேசன்**

அவர்கள் அமரத்துவமடைந்த முதலாமாண்டு நிறைவின் ஞாபகார்த்த அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றோம்.

வழியாய் எமக்கிருந்தாய்
வாழ்க்கையின் துணையாய் நின்றாய்
விழிநீர் சொரிய எம்மை
விட்டு நீ நீங்கிச் சென்றாய்
இனி நாம் எங்கு காண்போம்
உன் ஒளிமுகத்தை இங்கு
வருடம் ஒன்று தாண்டி
வாழ்கிறோம் வெறுமையோடு!
உம் பிரிவைத் தாங்க முடியாத துயருடன்

இணுவில் மேற்கு. இணுவில். — குடும்பத்தினர்.

# தனிமைப்படுத்தல் நிலையத்தில் மதிய உணவில் புழுக்களா?

கிளிநொச்சி, ஜன. 12
கிளிநொச்சி- கிருஷ்ணபுரம் தனிமைப்படுத்தல் மையத்தில் நேற்று மதியம் வழங்கப்பட்ட உணவில் புழுக்கள் காணப்பட்டன என்று அங்கு தனிமைப் படுத்தப்பட்டவர்கள் தெரிவித் துள்ளனர்.

அந்த நிலையத்துக்கு உணவு கள் பார்சல் மூலம் வழங்கப்ப டுகின்றன. உணவு உண்ணும் போதே புழுக்கள் காணப்பட் டன என்ற முறைப்பாடு தெரி விக்கப்பட்டது என அவர்கள் தெரிவித்தனர் இது தொடர்பில் சுகாதாரப் பிரிவுக்கு முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது என் றும் தெரிவித்தனர்.

எனினும், இது பற்றிய ஆதா ரங்களோ முறைப்பாடோ செய் யப்படவில்லை. இந்த விடயத் தில் ஆராந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்தது. (த111.6)


## 4ம் ஆண்டு நினைவலைகள்



அமரர் பொன்னம்பலம் இரத்தினம்
(பொறிக்கடவை அம்பாள் பூசகர்)

அன்னை மடியில் 27.12.1926
அம்பாள் அடியில் 27.12.2016

தாத்தா என்றாலே முகம் மலர்ந்து
ஆசையுடன் அரவணைப்பீர்களே
எங்கள் செல்லக் குறும்புகளை பார்த்து
மகிழ்ந்து இரசிப்பீர்களே- தாத்தா
நீங்கள் இன்றி கடந்தன 4 ஆண்டுகள்
என்றும் உங்கள் நினைவுகள்
எம் மனதில் பசுமையாக இருக்கின்றன
நீங்கள் எம்முடன் இல்லை என்ற ஏக்கமும் கூடவே
தாத்தா உங்களைப் பற்றி மற்றவர்கள் கதைக்கும் போது
பூட்டப்பிள்ளைகளாக பெருமிதம் கொள்கிறோம்.
தாத்தா நீங்கள் நேசித்த பொறிக்கடவை அம்பாள்
பாதத்தில் வீற்றிருக்க, எல்லாம் வல்ல அம்பாளை
வேண்டிநிற்கிறோம்.

அன்புடன்:
துர்க்கா, அச்சுதன்
(பூட்டப்பிள்ளைகள்)

மீசாலை மேற்கு.


## மாகாணத் தேர்தலை நடத்தலாமா ? ஆராய்ந்தது தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, ஜன. 12
மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதில் உள்ள சிக்கல் நிலைக்கு தீர்வு கண்டு தேர்தலை விரைவாக நடத்துமாறு அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் முன் வைத்துள்ள கோரிக்கை குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு உரிய கவனம் செலுத்தியுள்ளது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அரசியல் கட்சி செயலாளர்களிடம் தெரிவித் துள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவுக் கும் அங்கீகரிக்கப்பட்ட அரசி யல் கட்சிகளுக்கும் இடையி லான சந்திப்பு தேர்தல்கள் ஆணைக்கு முவில் நேற்று நடைபெற்றது.

இந்தச்சந்திப்பு குறித்து தேர்தல் கள் ஆணைக்குழு வெளியிட் டுள்ள அறிக்கையில் குறிப்பிட் டுள்ளதாவது:

2020ஆம் ஆண்டுக்கான தேர் தல் வாக்காளர் பெயர்ப்பட்டியல் மீள்பரிசீலனை நடவடிக்கை களுக்காக அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்குவது குறித்து கட்சி செய லாளர்களிடம் கோரிக்கை விடுக் கப்பட்டதுடன் அதனூடாக அனை வரது தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.


அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வருடாந்த கணக்க றிக்கை, அதிகாரிகள் குழு திருத் தம் மற்றும் கட்சி அரசமைப்பு திருத்தம் ஆகியனவற்றை உட னடியாக தேர்தல்கள் ஆணைக் குழுவுக்குச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

தேர்தல்கள் சட்டத் திருத்தம் தொடர்பில் பேசப்பட்டு வருவதன் காரணமாக அது தொடர்பான யோசனைகளை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு முன்வைக்கு மாறும் அறிவுறுத்தப்பட்டது.

மாகாண சபைத் தேர்தலை நடத் துவதில் தற்போது நடைமுறை யில் உள்ள சிக்கல் நிலையை நிவர்த்திசெய்து இந்தத்தேர்தலை உடனடியாக நடத்துமாறு அரசி யல் கட்சிகளின் உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இந்தக் கோரிக்கைகுறித்து ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது. என் றுள்ளது. (குஇ)


## மரண அறிவித்தல்

பிறப்பு
11
07
1960



இறப்பு
11
01
2021

### நடராஜா திருக்கேதீஸ்வரச்செல்வன்

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா திருக்கேதீஸ்வரச்செல்வன் (குஞ்சன்) (இளைப்பாறிய தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) நேற்று (11.01.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா காமாட்சிப்பிள்ளையின் அன்பு மகனும், தவராணியின் (ஆசிரியர் -பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகலிங்கம், இராசம்மாவின் மருமகனும், தசகீர்த்தன், (மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி) ரிஷிகேசன் (யாழ் பல்கலைக் கழகம் முகாமைத்துவம்) தசாயனன், மகிஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், சரசவல்லி, தமிழ் செல்வன், காலஞ்சென்ற திருமலர்ச்செல்வன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பாலசிங்கம், கோமளவல்லி, றஞ்சன், தம்பிராசா ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற டயானி, ஜெயநந்தினி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை, சகுந்தலாதேவி ஆகியோ ரின் மருமகனும், காலஞ்சென்ற கந்தசாமி, சுப்பிரமணியம் ஆகியோரின் பெறா மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், பொன்னம்பலம், செல்லப்பா அவர் களின் மருமகனும், அன்னப்பிள்ளை, சின்னனாச்சிப்பிள்ளை, மகேஸ்வரி ஆகி யோரின் பெறாமகனும், நவரட்ணம் அவர்களின் மருமகனும், சாயிநடராஜ் இன் சித்தப்பாவும், பார்த்தீபனின் மாமனாரும், கலாதரன், நேசபரன், பிரணவி நிரோஷன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2021) கொல்லங்கலட்டியில் அமைந்துள்ள அவரது வீட்டில் இடம்பெற்று பிற்பகல் 3.00 மணிக்கு கீரிமலை செம்மண்வாய்க்கால் மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P: 077 0064 932


## கொரோனாவால் மேலும் எண்மர் சாவு

இதுவரையான காவு 240

கொழும்பு, ஜன. 12
இலங்கையில் கொரோனா வைரஸ் தாக் கத்தால் மேலும் 8 பேர் உயிரிழந்துள் ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் அசேல குணவர்தன நெற்றிரவு அறிவித்துள்ளார்.

6 ஆண்களும், இரு பெண்களுமே இவ் வாறு உயிரிழந்துள்ளனர். இவர்களில் ஒருவர் சிறைக் கைதியாவார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத் தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 240 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 227 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் சாவடைந்துள் ளனர். கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவு உயிரிழப்புகள் இடம்பெற்றுள் ளன. (த22)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 13.12.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
### கார்த்திசே சுப்பிரமணியம்
(மணியம் பரியாரியார்)

அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 12.01.2021 செவ்வாய்க்கிழமை அதிகாலை 05.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி தெணியம்மன் கடற்கரையில் கரைக்கப்படும். அந்நிகழ்விலும் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது அத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சிவகிரி, தம்பசிட்டி வீதி,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.
குடும்பத்தினர்.

## இரணைமடு....

மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடும் மழை தொடரக்கூடிய சாத்தியங்கள் உள்ளதால், இரணைமடுக் குளத்தின் 6 வான்கதவுகளில் இரண்டு ஒரு அடி 6 அங்குல உயரமும், மற்றைய இரு வான்கதவுகள் ஒரு அடியும், மேலும் இரு வான்கதவுகள் 6 அங்குலமும் திறந்து விடப்பட்டுள்ளன என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்தது.

தொடர்ந்து மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் வான்கதவுகள் இன்னும் திறக்கப்படும் என்றும், அதனால் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

பன்னங்கண்டி, முரசுமோட்டை, ஊரியான், கண்டாவளை, பரந்தன், உமையாள்புரம் உள்ளிட்ட தாழ்வு நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும், பரவலாக பலத்த மழை பெய்து வருவதால் ஏனைய குளங்களும் வான் பாயும் நிலையில் உள்ளன. குளங்களின் கீழ்பகுதியில் உள்ள மக்களையும் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வெள்ள இடர் பகுதிகளாக காணப்படும் பொன்னகர், கனகாம்பிகை குளம், ஆனந்தபுரம் கிழக்கு, இரத்தினபுரம், பிரமந்தனாறு, தர்மபுரம், உழவனூர், பெரியகுளம், கல்லாறு மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களான, வசந்தநகர், முறிகண்டி, செல்வபுரம் பகுதிகளில் உள்ள மக்களும் அவதானமாக செயற்பட வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இடர் ஏதும் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கிராமசேவையாளர், படையினர் மற்றும் பொலிஸாரின் உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

## 68.1....

திணைக்கள யாழ்.திருநெல்வேலி நிலைய பொறுப்பதிகாரி த.பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் தொடக்கம் மழை பெய்கின்றது. நேற்றுமுன்தினம் காலை 8.30 தொடக்கம் நேற்றுக்காலை 8.30 மணி வரையான நேரத்தில் 28.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி யாழ்.திருநெல்வேலி நிலையம் அமைந்துள்ள பகுதியில் பதிவாகியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மழையுடன் கூடிய கால நிலை அல்லது முகில் கூட்டங்களுடனான காலநிலை இன்றும் நாளையும் நீடிக்கும் என்றும் பிரதீபன் தெரிவித்தார். (த-111)

## துக்க நாளாக...

தெரிவித்தார்.

எனினும் தூபியை மீண்டும் அமைப்பதற்கு நேற்றுக் காலை இணக்கம் ஏற்பட்டதை அடுத்து போராட்டம் துக்கதினமாக மாற்றப்பட்டது. (ம)

## வடக்கில் கடும்..

நாட்டின் தென்கிழக்கில் வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தால் தற்போது வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல இடங்களில் கடும் மழைவீச்சி கிடைத்து வருகின்றது. மழையுடனான காலநிலை இன்னும் 24 மணி நேரத்துக்குத் தொடரும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், தாழ் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மழையால் யாழ்ப்பாணத்தில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தெல்லிப்பழையில் கடும் மழை மற்றும் வெள்ளத்தால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 7 பேரும், மருதங்கேணியில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேரும், சாவகச்சேரியில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி, வல்லை பிரதேசங்கள் தற்போது பெய்து வரும் கனமழை காரணமாக நீரில் மூழ்கியுள்ளன. தொண்டைமானாறு கடல்நீரேரிக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது. தொண்டைமானாறு கடல் நீரேரியில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணையின் இரு கதவுகள் நேற்று மாலை திறக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் 14 குடும்பங்களைச் சேர்ந்த 50 பேர் பொது மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கின் ஏனைய இடங்களிலும் வெள்ளத்தால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தின் வான்கதவுகள் அனைத்தும் திறக்கப்பட்டுள்ளன. ஏனைய குளங்கள் வான்பாயும் நிலையில் உள்ளன. அங்குள்ள தாழ் நிலப் பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது. (எ)

## இயல்பை...

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி கடந்த வெள்ளிக்கிழமை இரவு நிர்வாகத்தால் இடித்தழிக்கப்பட்டது. அனுமதி பெறாத கட்டடங்களை அகற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று துணைவேந்தர் தெரிவித்தார். அதையடுத்து மாணவர்களும், அரசியல் தலைவர்களும், சமூக ஆர்வலர்களும் போராட்டங்களை மேற்கொண்டனர். பல்கலைக் கழக மாணவர்கள் உணவு ஒறுப்பிலும் ஈடுபட்டனர்.

இந்தச் செயலுக்கு உலக அளவில் கடும் கண்டனங்கள் குவிந்தன. அரசியல் கட்சிகள் ஓரணியில் நின்று இயல்பு மறுப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தன. இந்த இயல்பு மறுப்புப் போராட்டத்துக்கு பல தரப்பினரும் ஆதரவைத் தெரிவித்தனர்.

நேற்று வடக்கு, கிழக்கில் முற்றாக இயல்பு நிலைமை ஸ்தம்பிதமடைந்தது. கடைகள் பூட்டப்பட்டு, தனியார் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டிருந்தது. வீதிகளில் மக்கள் நடமாட்டம் முற்றாக இல்லாதிருந்தது. (ம)

## வடக்கில்...

ஆய்வு கூடத்தில் 427 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது 31 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 313 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 24 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

வவுனியா பசார் பகுதியைச் சேர்ந்த 25 வர்த்தகர்களுக்கு நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம் வவுனியா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்காகச் சென்ற இருவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் அவர்களுக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் இருவர் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்கள் அண்மையில் தொற்றுடன் இனங்காணப்பட்டவரின் கடைக்குச் சென்று வந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. முதலில் தொற்றுடன் இனங்காணப்பட்டவர் தம்புள்ள சந்தைக்கு மரக்கறிக் கொள்வனவுக்காகச் செல்பவர். அவரிடம் காணப்பட்டது வீரியம் மிக்க வைரஸ் என்று சுகாதாரப் பிரிவினர் எச்சரித்திருந்தனர்.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர் தொண்டைநோ காரணமாக தெல்லிப்பழை மருத்துவமனைக்குச் சென்றபோது அவருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர் பல்கலைக் கழக விரிவுரையாளராவார். இவர் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகளுக்காக 3 வாரங்கள் கொழும்பில் தங்கியிருந்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்பியிருந்த நிலையில் இவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பளையில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அண்மையில் வெளிநாடு செல்வதற்காகக் கொழும்பு சென்று திரும்பி வந்த 11 பேரில் 10 பேருக்கு உறுதி செய்யப்பட்டிருந்தது. எஞ்சிய ஒருவருக்கும் இன்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் வவுனியாவைச் சேர்ந்த 24 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் வவுனியா பசார் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்களாவர்.

கடந்த 8ஆம் திகதி வவுனியா பசார் வீதியைச் சேர்ந்த 54 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்று தொற்றுக்குள்ளானவர்களுடன் சேர்த்து வவுனியா கொரோனா கொத்தணியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 103 ஆக அதிகரித்துள்ளது. (எ-26,110,6,113)

## யாழ்....

கத்திலுள்ள அனைத்து தரப்புகளுடனும் பேச்சு நடத்துவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தயாராகவே இருக்கிறார் இவ்வாறு கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக் கழகங்களுக்கும் பொதுவான சட்டம் உள்ளது. பல்கலைக்கழக வளாகத்தில் நினைவு சின்னமொன்றையோ, சிலையொன்றையோ அல்லது நிர்மாணமொன்றையோ காட்சிப்படுத்துவதற்காக இருந்தால் அதற்கு பல்கலைக்கழகத்தின் அனுமதி அவசியம்.

ஆனால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மேற்படி நினைவுச் சின்னத்தை அமைப்பதற்கு பல்கலைக்கழகத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. இந்தக் காரணத்துக்காக மட்டுமே நினைவுச் சின்னம் அகற்றப்பட்டுள்ளது. அது ஒழுக்கம் மற்றும் ஒருமைப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். மாறாக இதன் பின்னணியில் எவ்வித அரசியலும் கிடையாது.

இந்தப் பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்படவேண்டும். அதனை இழுத்தடிப்பது அரசின் நோக்கம் கிடையாது. குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். அதற்கான வாய்ப்பு உருவாவதற்கு இடமளியோம். யாழ். பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மாணவர்களுடன் இன்று (நேற்று) பேச்சு நடத்தி, இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளார். பிரச்சினை சுமுகமாகத் தீரும். அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும். தேவையேற்படின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரகோன் அங்குசென்று இந்த விவகாரம் தொடர்பாக பல்கலைக் கழகத்தின் அனைத்து தரப்புகளுடனும் பேச்சு நடத்துவதற்குத் தயாராக உள்ளார்என்றார். (ம-44)

## தூபிக்கு...

அதையடுத்து பல்கலையில் சிறு பதற்றம் ஏற்பட்டுத் தணிந்தது.

தூபி மீண்டும் அமைக்கப்படும் என்ற வாக்குறுதியை மாணவர்களுக்கு வழங்கிய துணைவேந்தர், அவர்களையும் அழைத்துக் கொண்டு பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்தபோது ஆரம்பத்தில் சிறப்பு அதிரடிப் படையினர் அவர்களைத் தடுத்து நிறுத்த முயன்றனர். எனினும் அவர்களை மீறி மாணவர்களை அழைத்துக்கொண்டு துணைவேந்தர் சென்றார்.

அப்போது கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நினைவிடம் செல்வதற்கு மீண்டும் தடை விதித்தார். இதையடுத்து 'என் மாணவர்கள் உணவில்லாமல் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். அவர்களின் போராட்டத்தை நான் முடித்து வைக்க வேண்டும். புதிய கட்டடங்களை நாம் இப்போது அமைக்கவில்லை. செல்லவிடுங்கள்' என்று தெரிவித்து நினைவிடத்துக்குச் சென்ற துணைவேந்தர், மாணவர்களுடன் இணைந்து தேவாரம்பாடி அடிக்கல்லும் நட்டார். (ம-26)

## இடிக்கப்பட்ட...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி கடந்த வெள்ளிக்கிழமை இரவோடிரவாக இடித்து அகற்றப்பட்டது. அதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள், பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என்று பலரும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். நினைவுத் தூபி இடிக்கப்பட்டமைக்கு தமிழகத்திலும் உலக அளவிலும் கண்டனங்கள் வெளிப்படுத்தப்பட்டன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் உணவு ஒறுப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர். இந்த நிலையில் இடிக்கப்பட்ட தூபியை மீண்டும் அமைக்க துணைவேந்தர் சிறிசற்குணராஜா இணக்கம் தெரிவித்தார்.

மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட இடத்துக்கு நேற்று அதிகாலை 3 மணியளவில் சென்ற அவர் தூபி மீண்டும் அமைக்கப்படும் என்ற வாக்குறுதியை மாணவர்களுக்கு வழங்கினார். அதையடுத்து மாணவர்கள் தம் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தனர். பின்னர் மாணவர்களும் துணைவேந்தரும் இணைந்து தூபி இடிக்கப்பட்ட இடத்தில் மீண்டும் அதை எழுப்புவதற்கு அடிக்கல் நட்டனர். (ம-26)

# அரணாக நின்றனர் விஹாரி, அஸ்வின் ஆஸியை சமன்செய்தது இந்திய அணி



சிட்னி, ஜன. 12

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆஸ்திரேலிய அணி இலகுவாக வெற்றிபெறும் என்று எதிர்வு கூறப்பட்ட நிலையில் விஹாரி, அஸ்வின் இருவரும் இணைந்து ஆஸ்திரேலியாவுக்கு சிறு வாய்ப்பையும் வழங்காமல் அரண்போல் செயற்பட்டு ஆட்டத்தை சமன்செய்தனர்.

ஆஸ்திரேலியாவின் சிட்னி ஆடுகளத்தில் கடந்த 7ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 338 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 244 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. முதல் இன்னிங்ஸில் முன்னிலையுடன் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 6 இலக்குகளை இழந்து 312 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

**பரபரப்பான நேற்றைய நாள்**

இந்திய அணிக்கு 407 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அந்த அணி நேற்றுமுன்தின நான்காம் நாளில் 2 இலக்குகளை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தின் இறுதி நாளுக்காக புஜாரா 9 ஓட்டங்களுடனும், ரகானே 4 ஓட்டங்களுடனும் களமிறங்கினர். வேறெந்த ஓட்டத்தையும் பெறாமல் வெளியேறினார் ரகானே. அதன்பின் களமிறங்கிய பன்ட் ஒரு நாள் ஆட்டங்களின் பாணியில் ஆஸ்திரேலியப் பந்துவீச்சாளர்களைப் புரட்டியெடுத்தார். கிடுகிடுவென ஓட்டங்கள் எகிறின. 64 பந்துகளில் அரைச்சதம் கண்டார் பன்ட். மறுமுனையில் நிதான த்துடன் புஜாரா. நிதானம், அதிரடி என இரண்டும் சேர்ந்து ஆஸியை நிலைகுலைய வைத்தன. 97 ஓட்டங்களுடன் பன்ட் ஆட்டமிழந்தார். 77 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் புஜாரா. புஜாரா ஆட்டமிழக்கும்போது இந்திய அணி 272/5 என்ற நிலையில் இருந்தது.



நாள் முடிவடைய சுமார் 45 பந்துப்பரிமாற்றங்கள் மீதமிருந்தன. இதனால் ஆஸ்திரேலியா வென்றுவிடும் என்ற நிலை. எதிர்பார்ப்புக்களை பொய்யாக்கி விஹாரி, அஸ்வின் இணைந்து அரணாக நின்றனர். இறுதிவரை இந்த இணைப்பாட்டத்தை பிரிக்க ஆஸ்திரேலியாவால் முடியவில்லை.

இந்திய அணி 5 இலக்குகளை இழந்து 334 என்றிருந்தபோது நாள் முடிவுக்கு வர ஆட்டம் சமநிலையானது. சிமித் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)

## மரண அறிவித்தல்



### திருமணிதேவி கனகரத்தினம்

தோப்புக்காடு காரைநகரைப் பிறப்பிடமாகவும், வட்டு மேற்கு வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமணிதேவி கனகரத்தினம் நேற்று (11.01.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் பகவதியம்மா அவர்களின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மனோண்மணி அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கனகரத்தினம் (முன்னாள் எழுதுவினைஞர், இலங்கை துறைமுக அதிகாரசபை கொழும்பு), அவர்களின் அன்பு மனைவியும், அமரர் அம்பிகாதேவி, கைலாயநாதன் அமரர் லோகமகாதேவி, சற்குணநாதன், அமரர் வரதாதேவி, கந்தசிவநாதன், ஶ்ரீரங்கநாதன், கைலாயதேவி, ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் ரவீந்திரநாதன், சந்தானநங்கை (கணக்காளர்-சி.க.கூ), நற்குருவேந்தன் (லண்டன்), அருள்வேந்தன் (நடத்துனர், இ.போ.ச), அமரர் கஜேந்திரவேந்தன், அமரர் கிருஷ்ணஜெயநங்கை ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேந்திரராஜன் (வியாபாரம்), நந்தினி (லண்டன்), மலர்மகள் (ஆசிரியை, மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும், பிரியநங்கை, தனுசன், மலர்வேந்தன், துஷ்யந்தினி, நிரேஷ்வேந்தன், சஜேந்திரவேந்தன் ஆகியோரின் பேர்த்தியும், திஸ்யா, கவினாஷ், சாகித்யா ஆகியோரின் பூட்டியும், அமரர் சுப்பிரமணியம் (இளைப்பாறிய அதிபர்), அமரர் செல்வரத்தினம் (இளைப்பாறிய அதிபர்), அமரர் தேனியம்மா, அமரர் காசிவிசாலட்சுமிஅம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (12.01.2021) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## பிள்ளையானுக்கு...

முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உள்ளிட்ட 5 பேருக்கும் எதிராக மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையை சட்டமா அதிபர் திரும்பப் பெற்றார். இதையடுத்து வழக்கின் தீர்ப்பு நாளை வழங்கப்படவுள்ளது. இந்த வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது.

சந்திரகாந்தன் உள்பட 5 எதிரிகளும் மன்றில் முன்னிலையாகினர். வழக்குத் தொடுனர் சார்பில் மூத்த அரச சட்டவாதி மாதவ தென்னக்கோன், அரச சட்டவாதி செகான் முஸ்தபா ஆகியோர் முன்னிலையாகினர். சந்தேக நபர்கள் சார்பில் வழமையாக முன்னிலையாகும் ஜனாதிபதி சட்டத்தரணி உள்ளிட்ட பலர் முன்னிலையாகினர். எதிரிகள் 5 பேருக்கும் எதிரான குற்றப்பத்திரிகை மீளப் பெறப்படுகின்றது என்று மூத்த அரச சட்டவாதி மன்றுரைத்தார்.

2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி, மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனையில் ஈடுபட்டிருந்தபோது, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டார். (ம)

## ஆசிரியருக்கு...

மற்றும் ஆசிரியர்களிடம் இருந்து பெறப்பட்ட மாதிரிகள் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் ஆசிரியர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு நெடுங்கேணி கல்வி வலயத்துக்கு உட்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் என 276 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையிலேயே ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை இன்னொருவரின் முடிவு சந்தேகத்துக்கு இடமான வகையில் உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-18)


**மரத்தளபாடங்கள் செய்வதற்கு ஆள்கள் தேவை**

முழுநேரமாகப் புதிய மரத் தளபாடங்கள் செய்வதற்கும், திருத்த வேலை செய்வதற்கும் அனுபவம் மிக்கவர்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்ய விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்பு:
**0762276722**

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 09 | 11 |
| 05 | 01 |
| 1929 | 2021 |



சுழிபுரம் - மேற்கு

### கார்த்திகேசு அரிச்சந்திரா

**(ஓய்வுநிலை விளையாட்டு அதிகாரி - சங்கானை)**

சுழிபுரம் மேற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு அரிச்சந்திரா நேற்று (11.01.2021) திங்கட்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு (கைசர்) - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகபூசணத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கோவிந்தசாமி, சிற்றம்பலம், குருசாமி, மார்க்கண்டு, சரஸ்வதி, மகாலட்சுமி, உருத்திரா மற்றும் இந்திராணி (கனடா), ரவீந்திரநாத் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சண்முகலிங்கம் (பிரித்தானியா) அவர்களின் அன்பு மைத்துனரும், சந்திரகுமாரன் (ஓய்வுநிலை ஆசிரியர் - சுழிபுரம்), சந்திரமோகன் (கனடா), சந்திரகலா (கனடா), சந்திரகாந்தன் (கனடா), சந்திரரூபன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சந்திரயோகன் மற்றும் சந்திரிகா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மலர்விழி மற்றும் கோமதி, ஜெகதீஸ்வரன், சதாயினிமலர், கமலகுமாரி, பாலகிருஷ்ணன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கோகுல வர்த்தன், வைஷ்ணவி, வர்மன், தர்மினி-நாகரத்தினம், துஷ்யந்தன்-கிருஷ்ணப் பிரியா, ஜெயந்தினி, கர்ஷினி, நிசானி, ஹிசான், யோசிக்கா, சந்தோஷ், கிருஷிக்கா, கிருஷாந்தன், அஜந்தன் ஆகியோரின் பேருனாரும், வெண்ணிலா, சயானன், வேணுஜன், நவீரா ஆகியோரின் பீட்டனாருமாவார்.

அன்னாரின் இந்து சமய கிரியைகள் இன்று (12.01.2021) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ஆரம்பமாகி திருவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**"சந்திரகோட்டம்"**
**சுழிபுரம் மேற்கு.**
**தொலைபேசி: 077 44 53 310**

**தகவல்:**
**அ.சந்திரகுமாரன் (மகன்)**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.